# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 25 — தொலை பேசி: 2 3 4 1 1

வள்ளுவர் ஆண்டு 2003, மாசி 8உ (20-2-72) ஹாமிறு 1391 முஹறம் 4 புத்தகம் 25 இதழ் 13




# உலகத் தமிழ் மாநாடு ஆங்கிலத்திலாம்!

## ஆலோசனைக் குழுவின் முடிவு தமிழ் பேசும் மக்கள் அதிருப்தி!

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்குக் குறிப்பிட்ட சிலரே அழைக்கப்பட்டிருந்தனர். கூட்டம் பற்றிய செய்தி அறிந்து பல அறிஞர்கள் அன்றைய கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தனர்; கூட்டத்திற்கு வண தனிநாயகமடிகளார் தலைமை வகித்து மாநாடு பற்றிய விஷயங்களை விளக்கினர்;

அன்றைய கூட்டம் ஆரம்பத்தில் எல்லாம் ஆங்கிலமயமாகவே இருந்தது. யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட இருக்கும் தமிழ் விழாவுக்கு ஆலோசனைக் கூட்டத்திலேயே ஆங்கிலமே அரசோச்சியது; அங்கு பேசியோரெல்லாம் தமது பேச்சுக்களையும் கருத்துக்களையும் ஆங்கிலத்திலேயே தெரிவித்தனர்;

தமிழர் தலைநகரில், தமிழர் தலைமையில் தமிழ் மக்கள் மத்தியில் அன்றைய நிகழ்ச்சிகள் ஆங்கிலத்தில் நடந்ததுபற்றி அங்கு வந்திருந்த அறிஞர்கள் பலரும் ஆச்சரியம் தெரிவித்தனர். அன்றைய கூட்டத்திற்கு ஆங்கிலம் தெரியாதோரும் வந்திருந்தனர். அங்கு நடைபெற்ற விஷயங்கள் பலருக்குச் சிதப்பர சக்கரமாக இருந்தது.

( 7ம் பக்கம் பார்க்க )

## குமாரசூரியர் கூட்டத்தில் 75 பேர்!

குருநகரில் நடைபெற்ற குமாரசூரியர் வரவேற்பு விழாவிற்கு வருகை தந்த மொத்தமான ஜனங்களின் எண்ணிக்கை 75 மட்டுமே. அமைச்சர் பேச எழுந்த போது மிகுந்திருந்தோர் எண்ணிக்கை ஆக 58. அவ் வைபவத்தை குருநகர் வாழ் மக்கள் முற்றாகப் பகிஷ்கரித்துவிட்டனர்: கூடியிருந்தவர்களிலும் அனேகர் தனிப்பட்ட தம் கடமைகள் காரணமாக யார் யாரையோ திருப்தி பண்ணுவதற்காக முகத்தைக் காட்ட வந்தவர்களாக ஏனோ தானோ என்ற மனநிலையில் கூட்டத்திலிருந்து விலகியும், விலகாமலும் தெருவோரத்தில் நிற்கக் காணப்பட்டனர். சுவர் தெருக்கள் எல்லாம் எதிர்ப்புச் சுலோகங்கள் ஊர்வலம் சென்ற பாதை நெடுக அமர்க்களமாக எழுதப்பட்டிருந்தது.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த எம். எஸ். பேரின்பநாயகம் அவர்கள் தமது உரையில் யாழ். மாநகரசபை ஏகமனதாக நிறைவேற்றிய ஐ. நா. சாசனத்தில் சொல்லப்பட்ட ஜனநா

( 7ம் பக்கம் பார்க்க )

## "அடிமைத்தனத்தை தமிழினம் ஒருபோதும் ஏற்காது"

'இலங்கைத்தீவை தமிழினம் பகுதிபகுதியாகவும் முழுமையாகவும் ஆட்சிபுரிந்த வரலாறு இன்றிருக்கும் எங்களது சந்ததிக்கு மறைக்கப்பட்டுவருகின்றது. இனிமேல்



உருவாகப்போகின்ற அடுத்த சந்ததிக்கு எமது இனத்தின் வரலாறு கலைகலாச்சாரம் பண்பாடுகள் யாவும் திட்டமிட்டு மறைக்கப்பட்டுவிடலாம். எமது இளைஞர் சமுதாயமே அடுத்த தலைமுறைக்கு சரித்திர வழிகாட்டிகளாக நின்று விளங்கவேண்டும். ஈழத்துக் கலாச்சாரத்திற்கு எவ்வகையிலும் பொருத்தமற்ற வெளிநாட்டு நிர்வாணப் படங்கள் தரங்கெட்ட நூல்கள் இங்கு இறக்குமதியாவதை பரிசீலிக்க முடியாதவர்கள் எங்கள் மொழி, கலை, கலாசாரத் தொடர்புகளை அறுப்பதற்கு முனைந்து நிற்கின்றனர். ஈழத் தமிழினத்தைப் பார்த்து இன்று மொழியை கலைகலாசாரத்தை ஏன் உடைகளைக்கூட மாற்றி விடும்படி கேட்கின்றார்கள். இத்தகைய முயற்சிகளுக்கு தமிழினம் ஒருபோதும் அடிமையாகிவிட மாட்டாது.

'தமிழ் நாட்டுடன் நாம் வைத்திருக்கும் கலாச்சாரத் தொடர்புகள் இயற்கையாக அமைந்தவை. இந்தியத் தமிழும் இலங்கைத் தமிழும் ஒன்றே. நாம் தமிழ் இலக்கியத்தைப் படைப்போமேயன்றி இவர்கள் கூறுவதுபோல தனியான ஒரு இலக்கியத்தைப் படைக்கமாட்டோம், போர்த்துக்கேயரை ஒரு நூறு ஆண்டுகள் எதிர்த்து நின்று அரசு புரிந்தது யாழ்ப்பாண அரசு ஒன்றுதானென்பதை தமிழினம் பெருமையுடன் கருதவேண்டும். நாம் ஒரு காலத்தில் ஆட்சி நடாத்தியிருக்கின்றோம். 'சிங்கை நகர்' என்று கருதப்படுமிடம் ஒருகாலத்தில் தமிழ் இராசதானியாக இருந்தது. தமிழினத்தின் வரலாற்றை யார் மறைத்தாலும் அவற்றையெல்லாம் நாம் மக்கள் மத்தியிலே சென்று பிரசாரம் செய்யவேண்டும்; தமிழினம் தனித்துவம் பெற்ற இனம், அது யாருக்கும் ஒருபோதும் அடிமையாகிவிடாது. தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழமுடியும். தமிழர் வாழ்ந்தால்தான் தமிழ் சமுதாயம் வாழமுடியும்.'

(யாழ்—வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 3.2.72ல் நடைபெற்ற அண்ணா நினைவு விழாவில் தளபதி அமிர், 'அண்ணா ஒரு வரலாறு' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையிலிருந்து ஒரு பகுதி.)

—அனுப்பியவர் வண்ணை திருப்... 'கண்'

# - தணிக்கை -

## அரசியல் குருடர்களே! இதை நம்புங்கள்

'தமிழை யாராலும் அழிக்க முடியாது: எமது அரசாங்கமும் தமிழை அழிக்கமுயலவில்லை.

—குமாரசூரியர் (தினபதி 14-2-72)

## மொழியை விற்று பதவி பெற்றவர் கூறுகிறார்!

'எமது தமிழ்ப்பகுதியிலுள்ள அரசியல்வாதிகள் பல காலமாக மொழி வியாபாரம் நடத்தி வந்துள்ளனர். இதனால் நாமே நமது மொழிக்கு குந்தகம் விளைவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மொழி வியாபாரம் நடத்தாது மக்கள் தேவைகளை பூர்த்திசெய்ய தமிழ் அரசியல்வாதிகள் முன்வரவேண்டும்.'

—அமைச்சர் குமாரசூரியர் (தினபதி 14-2-72)

## சவால் விடுகிறார்! 'ராஸாக்கர்'

'இன்று தனிநாடு கோஷம் எழுப்பும் தமிழரசுக் கட்சியினர் தேர்தலுக்கு தேர்தல் கொடுக்கு கட்டுவது வழக்கம். அப்போது சமஷ்டி கோஷம் போட்டவர்கள், இப்போது தனிநாடு கோஷம் போடுகின்றனர். அவர்களுக்கு துணிவிருந்தால் தங்கள் தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தி, சமஷ்டி கட்சியையும் கலைத்துவிட்டு தி: மு: க: கட்சியை தொடங்கட்டும்;

—வி. பொன்னம்பலம் (தினபதி 14-2-72)

## புதிய அரசியல் சட்டம் பற்றி ஆராயப்படும்!

புதிய அரசியல் திட்டம் பற்றி ஆராய்ந்திடும் நோக்குடன் "மொழிவழித்தொழிற் சங்கங்கள் இம்மாதம் 24ம் திகதி பம்பலப்பிட்டி சரசவதி மண்டபத்தில் ஒரு மாநாட்டை கூட்ட ஏற்பாடு செய்துள்ளன. அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் முன்னணியில் நின்று இதை ஏற்பாடு செய்து வருகிறது.

மாநாட்டில் தலைவர் இராசமாணிக்கம், கே. நேசையா, ஹண்டி பேரின்பநாயகம் உட்பட பலர் உரையாற்றுவர். இறுதியில் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

# தனிச் சிங்கள வெறியினால் தமிழ் எழுதுநர்கள் அவதி!

அண்மையில் அரசாங்க பொது எழுதுநர் சேவைக்கு ஆட்சேர்ப்பு நிகழ்ந்ததும், அவர்கள் எவ்வெவ் விடங்களில் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதற்கான அறிவிப்பை தெரிவிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அழைக்கப்பட்டதும் யாவரும் அறிவர்.

30.12.71ல் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு வரும்படியான அழைப்புக் கடிதம் 29.12.71ல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட்டது. தமிழர்க்கு தனிச் சிங்களத்திலேயே அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டது. இதனை வாசித்து அறிந்துகொள்ளப் பலர் பெரும் சிரமத்திற்குள்ளாயினர். மொழிபெயர்த்துதவிய பலர் அமைச்சுக்குப் போகவேண்டியதில்லை என்று கூடக் கூறினராம். தமிழ் மொழி பெயர்ப்புக் கடிதம் பின்னரே அதுவும் தவறான மொழிபெயர்ப்புடன் அனுப்பப்பட்டதாம். 'நேர்முகமாக அறிவிக்கப்படும்' என்றிருப்பதற்குப்பதிலாக-'நேரடியாக அறிவிக்கப்படும்' என்றிருந்ததாம்.

நியமிக்கப்பட்ட சில தமிழ் ஊழியர்கள் சிங்களத்தில் வேலைசெய்யும்படி சில அலுவலகங்களில் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். தனிச் சிங்களத்தில் வரும் கடிதங்களை ஆங்கிலத்திலாவது மொழி பெயர்த்துதவும்படி சிலர் கேட்டதற்கு 'அப்படி செய்ய முடியாதென்று' கூறுகிறார்களாம்.'

'தெரிந்தால் சிங்களத்தில் செய்யும். இல்லாவிடின் வீட்டில் போயிரும்' — என்று கூட சில அதி தீவிர சிங்களவாதிகள் பயமுறுத்துகின்றனராம். மனமுடைந்த சிலர் வேலையிலிருந்து விலகினால் நல்லதே என்றுகூட எண்ணுகிறார்களாம்.

—'காண்டீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




புரட்சிகரன்,
முள்ளியவளை.

கே: என்னைச் சந்திக்கும் போது என்காதலி முதலில் சுதந்திரன் பத்திரிகையைக் கேட்கின்றுளே? இதற்கு என்ன செய்யலாம்?

ப: உமது காதலி உம்மைக் காதலிக்கவில்லை — சுயுக்தியாரைத்தான் காதலிக்கிருள் — எனவே காதல் தோல்வி உமக்குத்தான்!

ஃ

ஜி: தோமஸ்,
மட்டக்களப்பு.

கே: தமிழருக்குச் சுயாட்சி கிடைத்தால் தமிழ்த்துரோகி தினபதியார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவரா?

ப: சுயாட்சி கிடைக்கும் வரை தினபதியாரின் தமிழ்த் துரோகத்தை தமிழினம் சகித்துக்கொண்டிருக்கும் என்று நினைக்கிறீர்களா?

ஃ

அ: செ: அந்தோனிப்பிள்ளை,
சாவகச்சேரி.

கே: நாவலப்பிட்டி ஜெயதிலகா பூங்கா, கொழும்பு சுகததாசா அரங்கு யாழ்ப்பாணம் துரையப்பா அரங்கு இம்மூன்றினதும் பொ. சி. பெ. எது என்பதைத் தயவு செய்து கூறுவீர்களா?

ப: சுயநலம்!

ஃ

மு: ஜெயரட்ணம்,
நல்லூர் வடக்கு.

கே: மார்டின் நிலை என்னுச்சு?

ப: சீச்சீ, இந்தப் பழம் புளிக்கும் என்ற நரியின் நிலைதான்!

ஃ

ப. பாலசிங்கம்,
மீசாலை வடக்கு.

கே: தமிழ்த் தலைவர்கள் ஒரு கூட்டணியை அமைத்தால் என்ன?

ப: அமைக்கலாம் — தன்னுட்சி என்ற அடிப்படைக் கொள்கையில் அனைவரும் ஒன்றுபட்டால்!

ஃ

க. மகாதேவன்,
கொள்ளுப்பிட்டி.

கே: தமிழரசுக்கட்சியினர் தமிழரின் உரிமைக்காக போராடும்போது மலையகத் தமிழர்களைப்பற்றி சிந்திப்பதுண்டா?

ப: மலையகத் தமிழர்களுக்கும் சேர்த்துத்தான் தமிழரசுக் கட்சி போராடி வருகிறது! மலையகத் தமிழர்களின் உரிமை பறிக்கப்படுவதை எதிர்த்ததுதான் தமிழரசுக் கட்சியின் ஆரம்பம் என்பதை மறந்து விட்டீர்களா!

ஃ

மா: சிவமூர்த்தி,
அச்சுவேலி வடக்கு.

கே: தபால் தந்தி அமைச்சர் தமிழை மறப்பது ஏனோ?

ப: தமிழை நினைத்தால் மந்திரிப் பதவி கிடையாதே!

கே: மரவரி முறை ரத்துச் செய்யப்பட்டதையிட்டு உங்களின் அபிப்பிராயம் என்ன?

ப: மரவரி ரத்தினால் சிவல தொழிலாளர்களின் குடும்பங்கள் இனி மரவுரி உடுக்க வேண்டிய நிலை ஏற்படப் போகிறது!

கே: திருக்குறளில் வரும் "சால்பு" என்ற சொல்லுக்கு சரியான பொருள் தருக?

ப: 'சான்றாண்மை'

ஐ. ரவீந்திரன்
தையிட்டி
காங்கேசன் துறை

கே: "குருவிச் சாத்திரி" யாரின் குருட்டுக் கருத்துக்கள் யாவும் எப்போது மறையும்?

ப: குருவிச்சாத்திரி போன்ற துரோகிகளை தமிழினம் காலில் போட்டு மிதித்த தன் பின்!

ஃ

செ. முரளி[illegible]ரன்
தையிட்டி
காங்கேசன் துறை

கே: "ஈழத்துக் காந்தி, அண்ணல் செல்வாவின் இறுதி அவா யாது?

ப: தமிழினம் தனது சுயாதீனத்தை மீண்டும் பெற வேண்டும் என்பதுதான்!

ஃ

வி. கே. எஸ். பாலசந்திரன்
திவுத்துறைஎஸ்டேட்
எங்கந்துறை
எல்பிட்டிய

தணிக்கை

கே: இந்தியாவில் தி. மு. க.வுக்கு எதிராக இந்தியப் பத்திரிகைகள் எவ்வளவு பாரபட்சமாக எழுதி வருகின்றனவோ அவ்விதமே இங்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு பத்திரிகைதானும் நடுநிலைமையாய் எழுதாமல், செய்திகளை திரித்தே எழுதுகின்றனவே ஏன்?

ப: தமிழுக்காகப் பாடுபடுபவர்களை தாக்குவதற்கு துரோக ஏடுகள் எங்கும் சதி வேலை செய்து கொண்டேயிருக்கின்றன. என்ன செய்யலாம்!

ஃ

க. ஜெயன்
மாதகல்

கே: இலங்கை குடியரசான பின், தமிழ் மக்களாகிய எங்கள் நிலை?

ப: ஜீவமரணப் போராட்டம் தான்!

கே: தமிழ் கவிஞன் காசி ஆனந்தன் பற்றி, சில குறிப்புகள் கூறுங்கள்?

ப: இந்திய சுதந்திரப் போருக்கு எப்படி ஒரு பாரதி அவசியமாக இருந்தாரோ, அதே போல ஈழத்தமிழக விடுதலைப்போருக்கு உயிரோட்டமாக விளங்குபவர் நமது காசி ஆனந்தன்!

கே: காவடியார் ஆட்டங்கள் அடங்கி விட்டனவா?

ப: ஆடி அடங்கவேண்டிய காலம் தானே!

ஃ

பொ. பரஞ்சோதி
அழுதமுல்லை

கே: செனட் சபையில் தமிழனுக்கு சலுகையாவென்று கேட்டவருக்கே சலுகை இல்லாமல் போய் விட்டதே — தமிழனுக்கு கலை கலாச்சாரம் இல்லை யென்றவர்க்கு சலுகை உண்டா?

ப: கைகட்டிவாய் புதைத்து கூனிக்குறுகி கும்பிடுபோட்டு ஒரு மாதிரி மந்திரிப்பதவியை நிலைத்து விட்டது இப்போது!

பொ: கலைச்செல்வி,
ஏழாலை

கே: உங்களிடம் இரண்டுக்கு மேற்பட்ட கேள்விகள் கேட்டால் அவற்றுக்குப் பதில் அளிக்க மாட்டீர்களா?

ப: இது உங்கள் மூன்றுவது கேள்வியாயிற்றே...!

ஃ

க: நவரத்தினம்
நெடுங்கேணி

கே: இந்தோ-பாக்:போரில் கடைசி நிமிடம் வரை நீதிக்காகப் போராடி வீர—தீர செயல் புரிந்து உயிர் துறந்த தமிழ் வீரன் ஆறுமுகத்தைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

ப: புறநானூற்று வீரம் தமிழனிடம் மங்கி மறைந்து [illegible]வில்லை யென்பதை நிரூபி[illegible] விட்ட தமிழ் வீரர் அவ...!

கே: இரு துருவங்களை இணைப்பதுதான் சோசலிசம். இரு துருவங்களை மேலும் பிரிப்பது என்ன லிசம்?

ப: கூட்டணி லிசம்!

ஃ

எஸ்; சிறீகுமார்
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

கே: தமிழினத்தின் தானைத் தலைவன் இராசமாணிக்கத்தின் தேர்தல் அப்பீல் வழக்கு என்ன வாயிற்று:

ப: இன்னும் விசாரணைக்கு எடுக்கப்படவில்லை!

ஃ

க. மகாதேவன்
கொள்ளுப்பிட்டி
கொழும்பு

கே: தந்தை செல்வாவுடன் இருந்து படம் பிடித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த ஆவலை தாங்கள் உதவி புரிந்து பூர்த்தி செய்வீர்களா?

ப: நான் 'கமராமென்' அல்ல; 'கமராமென்'னுடன் வந்தால் உங்கள் ஆசை நிறைவேறும்!

கே: திருவாளர் சுயுக்தியாரே, தினபதி யுக்தியாரைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

ப: பத்திரிகை உலகின் அவமானச்சின்னம்!

ஃ

ரெ. திருநாவுக்கரசு. வசாவிளான்.

கே: டட்லியின் தந்தையின் ஆட்சியில் தமிழ்மொழியின் நிலை எப்படி இருந்தது?

ப: தமிழுக்கு சம உரிமை தரப்படும் என்று வாயளவில் கூறப்பட்டு வந்தது!

கே: தமிழ் மொழியை மேல் ஓங்கச் செய்ய என்ன செய்யவேண்டும்?

ப: தமிழ் அரசியல் ஆதிக்கம் பெற போராடவேண்டும்.

கே: தமிழ் மொழியை வளர்க்க முயன்று வரும் பெண்மணி யார்?

ப: உங்கள் வீட்டிலேயே வாழுகிறாரே!

வெட்டிஒட்டப்பட வேண்டிய முகவரி—
திருவாளர் சுயுக்தியார்,
மே/பா சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

# "சுயாட்சி மறுக்கப்படின் பிரிவினைக் கருத்து வளரும்"

மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறவேண்டுமென்று நாங்கள் சொல்கிற நேரத்தில் அது ஏதோ பிரிவினை வாதமாக இருக்குமோ, ஏற்கனவே திராவிட நாடு கேட்டவர்களாயிற்றே, அதையே மனதில் வைத்துக் கொண்டு கேட்கிறார்களோ — இது பிரிவினைக்குக் கொண்டுபோய் விடுமோ என்று பேசுவது முறையல்ல;



மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டு பெறுவது பிரிவினை வாதத்தை உடைப்பது. அதைத் தரமுடியாது என்று மறுப்பது அந்நகைய பிரிவினை வாதத்தை வளர்ப்பது. இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இதைப் புரிந்து கொண்டால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுகிற அந்தத் தத்துவம் எவ்வளவு பரிசுத்தமான இதயத்திலிருந்து—எவ்வளவு தூய்மையான உள்ளத்திலிருந்து புறப்படுகிறது என்பதை நாம் நன்ருக அறிந்து கொள்ளலாம்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கும்போது ராஜராஜன் சிலையைவைக்க அதிகாரம் கொடு, கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே குழாய்போட அதிகாரம் கொடு, கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே குழாய்போட அதிகாரம் கொடு, இங்கே கோட்டையைச் சுற்றியுள்ள புல்லை செதுக்க அதிகாரம் கொடு, ராமனுதன் சொல்லியதைப் போல தெப்பகுளத்தை செப்பனிட அதிகாரம் கொடு, தொழிற்சாலை துவக்க அதிகாரம் கொடு என்று ஒவ்வொரு அதிகாரமாகக் கேட்கிறோம் என்றுல் அதுதான் உண்மை. அதையெல்லாம் சேர்த்து நாம் மொத்தமாகக் கேட்கிறோம்.

இவ்வளவு அதிகாரங்களைக் கொடு என்று ஒவ்வொன்ருகக் கேட்டு நமக்கு வாய் வலித்து, அவர்களுக்கும் காது வலிக்கும் என்பதற்காகத்தான மாநில சுயாட்சி என்ற தலைப்பில் கேட்கிறோம்.

திருமண விழாவில் பெண்ணுக்கு என்னென்ன வேண்டுமென்பதை தங்கக் காப்பு, பட்டுச்சேலை, வைர நகை என்று ஒவ்வொன்ருகக் கேட்டாலும் பெற்றுலும் மொத்தமாக அவற்றிற்குப் பெயர் சீர்வரிசை என்பது;

பெண்ணுக்கு நகை, சாமான்கள், நிலபுலன்கள் என்பதுதான நாங்கள் சொல்கிற அதிகாரங்கள்; அதைத்தான் நாங்கள் சீர்வரிசை கொடு என்ற ஒரே வார்த்தையில் சொல்கிறோம். இதுதான் மாநிலங்களுக்கு அதிகாரம் கொடு என்பதற்கும் சுயாட்சிக்கும் உள்ள வேறுபாடாகும்.

ஏதோ மாநில சுயாட்சி என்பது சுய ஆட்சி என்கிற வார்த்தை இருப்பதால் விடுதலை பெற்று சுதந்திர நாடாக வேண்டும், மாநில சுயாட்சி பெற்றுவிட்டோம். கோட்டை கொத்தளங்களில் பறந்துகொண்டிருக்கிற அசோகசக்கரம் பொறித்த கொடியை கீழே இறக்கிவிட வேண்டு மென்று சொல்லுமளவிற்கு நாங்கள் முட்டாள்கள் அல்ல;

மத்திய அரசு மாநில அரசைக் கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு சில அதிகாரத்தை வைத்துக் கொள்ள வேண்டாமென்று யாரும் குறிப்பிடவில்லை; படிப்படியாக பலமுறை நாங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறோம். முஜிபுர் ரகுமானைப் பற்றிச் சொன்னீர்களே என்று கேட்கிறீர்கள்.

முஜிபுர் கேட்ட ஆறு அம்சத் திட்டத்திற்கும் முன்னேற்றக் கழகம் கேட்கிற மாநில சுயாட்சிக்கும் பெருத்த வேறுபாடு உண்டு.

முஜிபுர் ரகுமான் மாநில சுயாட்சி என்ற அடிப்படையில் அவைகளைக் கேட்டார். அப்படிக் கேட்ட நேரத்திலேயே, பாகிஸ்தானம் என்பது ஆயிரம் மைலுக்கு அப்பால் கிழக்கு பாகிஸ்தானும், இன்னொரு கோடியில் மேற்குப் பாகிஸ்தானும் இருக்கிறது; ஆகவே, இராணுவம் கூட எனக்குத் தனியாக வேண்டும். கரன்சி அடிக்கிற அந்த உரிமை கூட எனக்குத் தனியாக வேண்டும் என்றெல்லாம் முஜிபர் ரகுமான் கேட்டார்.

நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன் — முஜிபுர் ரகுமான் கேட்ட ஆறு அம்சத் திட்டத்துக்கும், நாங்கள் கேட்கிற மாநில சுயாட்சிக்கும் பெருத்த வேறுபாடு உண்டு என்று குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நாம் கேட்பது சுதந்திரம் அல்ல. முஜிபுர் ரகுமான் கேட்டதே கூட சுதந்திரத்தில் போய் முடிந்ததற்கு யார் காரணம் என்றுல், முஜிபுர் ரகுமான் அல்ல; யாஹியாகான்தான் காரணம்.

அவர் மாநில சுயாட்சிதான் கேட்டார்; அவர் 'கேட்டது கொஞ்சம் காரசாரமானது. நாம் கேட்பதை விடக் கடுமையானது.'

—கலைஞர் மு. கருணாநிதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மக்கள் மேயர்' ஆட்சியில் யாழ் மக்கள் படும் அவதி!

## வரிக்குமேல் வரி தாங்காது வரியிறுப்பாளர்கள் முணுமுணுப்பு!

### பாடம்புகட்டக் காலத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள் ஏழை மக்கள்!

ஸ்ரீலங்கா வர்த்தகர் சங்கம் என்ற பெயரில் ஒரு காளான் சங்கம் சமீபத்தில் யாழ் மேயர் துரையப்பா தலைமையில் அங்குரார்ப்பண கூட்டம் நடாத்தியது. அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு ஒழுங்குசெய்த 'பிரமுகர்களுக்கு' அங்கு அதிர்ச்சி வைத்தியம் செய்யப்பட்டது.

அங்கு பேசிய புகையிலை வியாபாரி ஒருவர் மாநகர சபை உறுப்பினர் ஒருவரிடம் லஞ்சம் தண்டவமாடுவதாகக் குறிப்பிட்டு சந்தைக் கடைகளுக்கு நாலாயிரம்—ஐயாயிரம் கேட்கப்படுவதாக வெட்டொன்று துண்டிரண்டாகப் பேசினாராம். இந்தப் பேச்சு அங்கிருந்த ஒரு மாநகர சபை உறுப்பினருக்கு சரியாக சூட்டுப்போட்டதாம்.

அவர் பேச எழுந்த பொழுது கோபத்தால் அவரது உடம்பு உதறல் எடுக்கத் தொடங்கிற்றும். தன்னுடைய 'காட்' ரொம்ப 'வீக்'கென்றும் அதனால் பேச முடியாமல் இருக்கிறதென்றும், லஞ்சம் கொடுப்பவர்கள் இருக்கிற படியால் தான் லஞ்சம் வாங்குகிறவர்களும் இருக்கிறார்கள் என்ற தத்துவத்தை பேசிவிட்டு உட்கார்ந்தாராம்.

(சில மாதங்களுக்கு முன் பெரிய கடை சந்தை வழியை வலோற்காரமாக அடைத்து ஒரு முஸ்லிம் வியாபாரி கடையொன்று கட்டிக் கொண்டார். இதனால் சந்தை வழிக்குப் பின்னால் உள்ள பல புகையிலை வியாபாரிகளது வியாபாரம் பாதிக்கப்பட்டுவிட்டது. இந்தக் கடை திடீரென்று முளைத்த பொழுது அதில் மையினால் எழுதப்பட்ட வாசகம் "...பாவுக்கு நாலாயிரம் ...திரத்துக்கு இரண்டாயிரம்" இதையும் மனதில் வைத்துத்தான் லஞ்சம் பற்றிப் பேசிய புகையிலை வியாபாரி பேசியிருக்கவேண்டும்.)

#### கிணறுவெட்ட...!

இவற்றையெல்லாம் செவிமடுத்த மேயர் துரையப்பா கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக முடிந்துவிட்டதென்று தனது சகாக்களுடன் காரில் ஏறி ஓடி மறைந்தார்.

கார் புறப்படும் பொழுது கூட்டத்துக்கு தலைமை வகித்தவர் ஏதோ மன்னிப்புகேட்கும் தோரணையில் காருக்குள் தலையை விட்டு ஏதோ சொல்ல முயற்சித்தார். அவருக்கு காருக்குள் இருந்தவர்கள் கொடுந்தமிழில்—இல்லை பச்சைத் தமிழில்—அர்ச்சனை செய்ததும் அவரது முகத்தில் அசடு வழிந்தது!

(பி. கு. மாநகரசபை எல்லைக்குள் யாரும் எவரும் உத்தரவின்றி கட்டிடம் கட்டப்படாது, அப்படிச்செய்தால் உடைத்தெறியப்படும் என்று பத்திரிகைகளில் மேயர் அறிக்கை விடுவதன் இரகசியம் அப்படிச் செய்யக் கூடாதென்ற நல்லெண்ணத்தால் அல்ல, தன்னையும் கலந்து மேவி தனது ஆசியுடன் செய்யவேண்டுமென்பதே யாகும் என்பது ஊரறிந்த இரகசியம்)

#### வரிப்பணம் கரியாகிறது

சரி, வரிதான் அறவிடப்படுகிறதே, இதை வரிப்பணம் சரியான முறையில்—உபயோகமான வற்றிற்கு செலவழிக்கப்படுகிறதா என்றால் அதுதான் இல்லை. வரிப்பணம் கரியாக்கப்படுகிறது என்று வரியிறுப்பாளர்கள் குறைப்படுகிறார்கள். தூணுக்குத் தூண் வேலையாட்கள் நின்று சுரண்டிக்கொண்டிருக்கிறார்கள். பென்சனில் வந்தவர்களை எல்லாமே பிடித்து வந்து மாதம் 300—

## யாழ் தபால்

400 என்று கொட்டிக் கொடுக்கப்படுகிறதாக கேள்வி.

கடந்த எட்டு மாதங்களில் 200 பேருக்கும் அதிகமானவர்களுக்கு நகரசபையில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது: பல ஆயிரம் ரூபா சம்பளமாக இவர்களுக்கு மாதா மாதம் கொட்டி அளக்கப்படுகிறது.

#### அவல நிலை

அதே நேரத்தில் வீதிகள் குண்டு குழிகளாக காட்சி தருகின்றன. வடிகால்கள் நாற்றமெடுத்து— நுளம்புகள் தங்கள் உயிரை வாங்குவதாக வரியிறுப்பாளர்கள் முணுமுணுக்கின்றனர். மின்சார விளக்குகள் தெருவோரங்களில் அழுது வடிகின்றன. புதிதாக போடவேண்டிய வீதிகள் பாலங்கள் போடப்படாமல் இருக்கின்றன.

மேயர் துரையப்பாவின் யாழ்ப்பாணத்தை 'அழகாபுரி'யாக்கும் திட்டம் 'ஈழநாடு' ஏட்டில் வரும் காகிதச் செய்தியோடு சரி. போகிற போக்கில் அழகாபுரியாக வல்ல, மயானபுரியாக யாழ்ப்பாணம் மாறும் அபாயம் இருக்கிறது.

சந்தைக் கடைகளது மாத வாடகைகளும் நூறு தொடக்கம்—நானூறு சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் பெரிய கடையில் இருக்கும் சிறு வியாபாரிகள் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

#### வரி உயர்வு

பிரேதப் பெட்டிகள் விற்கும் கடைக்கும் வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. 'மக்கள்' மேயர் ஆட்சியில் இனிச் செத்தாலும் கஷ்டமாக இருக்கப்போகிறது!

சாதாரண படிவங்களுக்கும் கட்டணங்கள் புதிதாக அறவிடப்படப்போகிறது. இதில் துரையப்பா தனது குரு குமாரசூரியரைப் பின்பற்றுகிறார் போலும். [illegible] சாரப் பத்திரம் [illegible] பத்திரம் இவற்றுக்கெல்லாம் இனி பணம் அறவிடப்படப் போகிறது. இவைமூன் புஇலவசமாகக் கொடுக்கப்பட்டது.

இன்னுமொரு நவீனவரி—பாதையில் விடப்படும், கார், மாட்டு வண்டில்களுக்கான வரி! மணித்தியாலம் 25 சதம்! 'மக்கள்' மேயர் மாட்டுவண்டில் வைத்திருக்கும் ஏழைத் தொழிலா[ளி] வயிற்றிலும் அடிக்கத் தய[ங்க]வில்லை. அவருக்கென்ன ஏ[ழை]களின் கஷ்டம் புரியவா போகிறது? மாட்டுவண்டில்காரன் சிங்கப்பூரிலிருந்து உள்ளூர் சினிமா கம்பனிகளூடாக வரும் காரில் சவியம நடாத்துகிறான் என்ற நினைப்புப் போலும்.

வரியைக் குறைப்பேன்—வரியிறுப்பாளரின் பளுவைக் குறைப்பேன் என்று வாய் வீரம் பேசிய மேயர் துரையப்பா இப்போது வரிக்கு மேல் வரி— புத்தம் புதிய நவீன வரிகளை கண்டு பிடித்து அமுல் நடத்துகிறார்.

இருபத்தைந்து ரூபாவாக இருந்த வீட்டுப் படப் பரிசோதனைக் கட்டணம் இருநூறு ரூபாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த வருடம் முதல் இது 800% உயர்வு. மாடிவீட்டில் வாழ்ந்து கொண்டு 6 சிறி காரில் பவனி வரும் 'மக்கள்' மேயர் வீடுகட்டுபவர்கள் எல்லோரும் பணக்காரர்கள் என்று நினைக்கிறார் போலும்.

இதுமட்டுமல்ல தேநீர் கடை லைசென்ஸ் கட்டணங்கள், மற்றும் வியாபார நிலையக் கட்டணங்கள் எல்லாம் ஐந்து பத்து மடங்கு கூட்டப்பட்டிருக்கிறது. உதாரணமாக பீடித் தொழிற்சாலை சுருட்டுத் தொழிற்சாலைகளின் கட்டணம் நூறுசதவீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது!

வரியிறுப்பாளர்கள் இப்போதுதான் 'மக்கள்' மேயரது சுய சொரூபத்தை, சுயநலத்தை காணக் கூடியதாக இருக்கிறது: அடுத்த தேர்தலில் அவரையும் அவரது திருக்கூட்டத்தையும் லஞ்சத்தின் மொத்த வியாபாரிகளையும்தேர்தலில்தோற்கடிக்க வரியிறுப்பாளர்கள் வழிமேல் விழிவைத்து காத்திருக்கிறார்கள்!

இடையில் மாநகர வரியிறுப்பாளர் சங்கம் மாநகர சபையிடம் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடர சட்ட ஆலோசனை பெற்று வருவதாக அறியப்படுகிறது.

மின்சார சேவையில் ஏற்படும் முறையீடுகளுக்கு மன்றம் பொறுப்பாயிருக்காது ஆனால் மின்சார அதிகாரச் சட்டத்தின் சரத்துக்களுக்கு அமைய மின்சாரம் ஒரு குறிப்பிட்ட 'வோல்ற்' அளவுக்கு குறைப்படாது: பிரதம மின் பரிசோதகரது கண்டிப்பான யோசனைகள் உதாசீனம் செய்யப் படுவதால் மாநகர மின்சாரம் எப்போதும் வோல்ற் அளவில் குறைந்ததாக பாவனையாளர்களுக்கு கிடைக்கிறது. [illegible]

(7-ம் பக்கம் பார்க்க)

## முஜிபுர் ஒரு தியாகக்காவியம்!

சுதந்திர வங்கத்தின் தந்தை ஷேக் முஜிபுர் ரகுமான் இதுவரை எட்டு முறை சிறைத் தண்டனை அனுபவித்திருக்கிறார்.

முதன் முதலாக அவரை 1937-ஆம் ஆண்டு சிறையில் தள்ளியவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள். அன்று அவர் 17 வயது மாணவர்; ஏழு நாட்கள் சிறையில் கழித்த பின் அப்போது விடுதலை பெற்றார்.

பாகிஸ்தான் ஆட்சியாளர்களோ அவரை ஏழு முறை சிறைப்படுத்தினர்.

பாகிஸ்தான் தனி நாடாகப் பிரிந்த பின் இந்த 24. ஆண்டுகளில் 3-ல் 1 பகுதி காலத்தை ஷேக் முஜிபுர் ரகுமான் சிறைகளிலேயே கழித்திருக்கிறார்;

அவரது எட்டாவது சிறைவாசத்தின் போது அவர் 9 மாதங்களுக்கு மேல் பாகிஸ்தான் சிறையில் கழித்துவிட்டார்.

வங்க தேச மக்கள் குடியரசை உருவெடுக்கச்செய்த அம் மக்களது போராட்டத்தில் இறுதிக் கட்டத்தில் நேரடியாக இருந்து அதில் பங்கேற்கும் வாய்ப்பை இந்தச் சிறைவாழ்வு அவரிடத்திலிருந்து பறித்துவிட்டது.

இதோ சிறையில் அவர் கழித்த நாட்களைப் பற்றிய விவரங்கள் சில.

1. 1937-ல் அரசியல் ஆர்ப்பாட்டம் ஒன்றில் பங்கேற்றார் என்பதற்காகக் கைது செய்யப்பட்ட அவர் ஏழு நாட்கள் சிறையில் கழித்தார்;

2. 1948-ஆம் ஆண்டு மறைந்த முகம்மது அலி ஜின்னா உரை நிகழ்த்தியதொரு கூட்டத்தில் வங்க மொழிக்கு உருது மொழி போல சம அந்தஸ்து அளிக்கப்பட வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்த மாணவர் அணிக்குத் தலைமை வகித்தார் என்பதற்காக ஷேக் முஜிபுர் ரகுமானை கைது செய்தார்கள்;

3. 1949-ஆம் ஆண்டு மக்கட்தொகையின் அடிப்படையில் பாகிஸ்தானத்து நாடாளு மன்றத்தில் கிழக்குப் பாகிஸ்தானுக்கு சமப் பங்கு பிரதிநிதித்வம்கொடுக்கப்படவேண்டுமென்று நடந்த கிளர்ச்சியில் பங்கேற்றார் என்பதற்காக கைது செய்து இரண்டரை ஆண்டு காலம் சிறையில் வைத்திருந்தார்கள்;

4. கிழக்குப் பாகிஸ்தான் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவரை 1958 அக்டோபர் 12-ஆம் தேதி கைது செய்து 1959 டிசம்பர் வரை விசாரணையின்றி சிறையில் வைத்திருந்தார்கள்;

5. 1962-ஆம் ஆண்டு அயூப்கான் கொண்டு வந்த "அடிப்படை ஜனநாயகம்" என்ற ஆட்சி முறையை எதிர்த்தார் என்பதற்காகஷேக் முஜிபுர் ரகுமான் கைது செய்யப்பட்டு 6 மாத காலம் சிறைக் காவலில் வைக்கப்பட்டார்;

6. 1966-ஆம் ஆண்டு இட்டுக் கட்டிய குற்றச்சாட்டுகளின் பேரில் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். நீதி மன்றம் அவரை விடுவித்தது: ஆனால் மீண்டும் கைது செய்யப்பட்டு சில்ஹெட்டுக்கு இட்டுச் செல்லப்பட்டார். மீண்டும் நீதிமன்றம் அவரை விடுவித்தது. இம்முறையும் உடனே கைது செய்து மைமன் சிங்குக்கு அழைத்துச் சென்றார்கள்: மூன்றாவது முறையாக நீதிமன்றம் அவரை விடுவித்ததோடு அவர் மீது பொய் வழக்குப் போட்ட பாகிஸ்தான் ஆட்சியை வன்மையாகக்கண்டித்தது. ஆனால் முஜிபுர் ரகுமான் டாக்காவை அடைந்ததும் மீண்டும் அவரைக் கைது செய்தார்கள்;

7. அவர் மீது தொடரப்பட்ட வழக்கு தோற்றதால் 1968 ஜனவரி 18-ஆம் தேதி நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. ஆனால் அவரை சிறைவாயிலில் மீண்டும் கைது செய்து டாக்கா ராணுவ முகாமில் கொண்டு போய் அடைத்து வைத்தார்கள். அகர்தலா சதி வழக்கு என்பதாக சோடித்த ஒரு வழக்கை ராணுவக்கோர்ட்டில் நடத்தினார்கள். ஆனால் மக்கள் இயக்கம் வளர்ந்து அதன் நிர்ப்பந்தத்தால் அவரை அயூப்கான் 1969 ஜனவரி மாதத்தில் விடுதலை செய்தார்;

8; 1971 மார்ச் 25-ஆம் தேதி நள்ளிரவு பாகிஸ்தான் ராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு மேற்கு பாகிஸ்தானுக்கு கொண்டு செல்லப்பட்ட ஷேக் முஜிபுர் ரகுமான் உலகெங்குமுள்ள விடுதலை விரும்பிகளின் ஒருமித்த குரலால் இப்போது பாகிஸ்தானத்து அதிபரான பூட்டோவால் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

## நீலக்கட்சிக் கிளை தபாற்கந்தோராக மாறியது

*(வல்லை நிருபர் சண்)*

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் உடுவில், நீலக் கட்சிக் கிளையொன்றை மந்திரி குமாரசூரியர் திறந்துவைத்ததும், சில மணிநேரங்களில் ஏற்றப்பட்ட 'போட்' பலகை அங்கிருந்து அகற்றப்பட்டு கிளையும் மூடப்பட்டதென்ற செய்தியொன்றை முன்பு 'சுதந்திரன்' வெளியிட்டிருந்தது. குறித்த செய்தியில் இதன் பின்னணியில் ஏதும் நடைபெறலாமென்றும் அவைபின்பு வெளியாகலாமென்றும் ஆரூடம் கூறியிருந்தது. அவை முற்றிலும் சரியென்பது இப்பொழுது மக்களுக்கு விளங்கிவிட்டது. அதே இடத்தில் தற்பொழுது ஒரு உப தபாற்கந்தோர தோன்றியிருக்கின்றது. இதைக் கண்டபொது மக்கள் இதுதான் நீலக்கட்சி லேபல் குத்துவோரின் எடுபிடியாட்டம் என்று கூறிக் கிண்டல் செய்கின்றார்கள் ஏற்கனவே தபாலமைச்சர். மூலமாக இந்த தபாற்கந்தோரை திறந்துவைத்திருக்கலாம்; அதை விடுத்து கிளையென்ற போர்வையில் ஏன் இப்படியெல்லாம் கூத்துக்கள் ஆடி மக்களை ஏமாற்றுகின்றார்கள்; தமிழ் மக்கள் மத்தியில் சில எடுபிடிகளின் ஆட்டம் பலிக்காது என்பதற்கு இதுவொன்றே எடுத்துக்காட்டாகும்; சுதந்திரன் செய்தி அனைத்தும் உண்மைச் செய்திதானென்பதை விளக்குவதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா...? என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள், இதுதான் நீலக்கட்சிக் கிளைதிறப்பின் இலட்சணமென்று மக்கள் கிண்டல் வேறு செய்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# தணிக்கையை அகற்றுக!

எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் நெருக்கடி ஏற்படும் காலங்களில் பத்திரிகைத் தணிக்கை அவசியமானது என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

வெளிநாட்டுப் படையெடுப்பு, உள்நாட்டுக் கலவரங்கள் ஏற்படும் நேரங்களில் நாட்டின் நலன் கருதி பத்திரிகைகளின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவதை எந்த ஒரு சனநாயகவாதியும் எதிர்க்கமாட்டான்.

அண்மையில் பாகிஸ்தானில் பயங்கர யுத்த நிலைமை தோன்றியது. அங்கு கொடுமைகள் பல நடைபெற்றன. என்றாலும் அந்த நாட்டில் பத்திரிகைத்தடை ஒருசில மாதங்களுக்குள் அகற்றப்பட்டுவிட்டது.

இராணுவ சர்வாதிகார ஆட்சி நடைபெறும் பாகிஸ்தானிலேயே அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சி இது.

நமது இலங்கை ஒரு சனநாயக நாடு என்று சொல்லப்படுகிறது. இங்கு மக்கள் ஆட்சி நடைபெறுவதாகப் பேசப்படுகிறது.

ஆயினும் சர்வாதிகார நாடான பாகிஸ்தான் பத்திரிகைத் தணிக்கை விடயத்தில் காட்டிய முன்மாதிரியை சனநாயக நாடு என்று சொல்லப்படும் இலங்கை ஏனோ பின்பற்ற மறுக்கிறது!

சென்ற ஆண்டு ஏப்ரல், மே, மாதங்களில் நடைபெற்ற வன்முறை சம்பவங்களையடுத்து, இங்கு பத்திரிகைத் தணிக்கை பிரகடனப்படுத்தப்பட்டது.

அன்றிருந்த சூழ்நிலையில்—அன்றிருந்த நெருக்கடியில் பத்திரிகைத் தணிக்கையை நடைமுறைக்கு கொண்டுவந்த அரசின் நடவடிக்கையை யாரும் குறைகூறிவிடமுடியாது. பத்திரிகை தணிக்கை முறையை அமுலுக்கு கொண்டுவருவதற்கு, அது கொண்டுவரப்பட்ட காலத்தில் அவசியம் ஏற்பட்டிருந்தது உண்மை!

ஆனால் தணிக்கை புகுத்தப்பட்டு இத்திங்கள் 15ம் திகதியுடன் ஒன்பது திங்கள் முடிந்துவிட்டன!

பத்திரிகைத் தணிக்கையை இனியும் நீடிப்பது அவசியம் தானா என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இலங்கையை ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப் போவதாக அரசு சொல்லிக்கொள்கிறது. புதிய நகல் அரசியல் திட்டம் பற்றி அரசு பொது மக்களிடமிருந்து கருத்துக்களையும் கோரியிருக்கிறது.

ஆனால் அதே சமயத்தில், புதிய அரசியல் திட்டத்தைப்பற்றி பொதுமக்கள் தங்கள் எண்ணங்களை, கருத்துக்களை முழுமையாக தெரிவிக்கமுடியாதபடி பத்திரிகைத் தணிக்கை தடைசெய்கிறது.

ஒரு சனநாயக நாட்டில் பத்திரிகைகளே பொது மக்களின் கருத்துக்களை படம்பிடித்துக்காட்டும் காலக்கண்ணாடியாக விளங்குவன.

பத்திரிகை தணிக்கை நடைமுறையிலிருப்பதன் மூலம் கருத்துச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் புதிய அரசியல் திட்டம்பற்றி பொது மக்களின் கருத்துக்களை அரசுக்கு எடுத்துக்காட்ட முடியாத ஒரு நிலை பத்திரிகைகளுக்கு இன்று ஏற்பட்டிருக்கிறது.

அரசியல் சட்டம் என்பது மக்களின் கருத்தறிந்து நிறைவேற்றப்பட வேண்டிய தொன்று. — — — —

—— —— —— தணிக்கை —— —— ——

—— —— —— —— ——

—— —— —— —— ——

—— —— —— —— ——

புதிய அரசியல் திட்டம் பற்றி யாரும் சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிக்கலாம் என்று ஒரு பக்கம் கூறிக்கொண்டு, மறுபக்கம் பத்திரிகைத் தணிக்கை மூலம் அந்த உரிமையை மறுப்பது—மட்டுப்படுத்துவது—நியாயமானதா என்பதை ஆட்சியாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனவே ஜனநாயகம் இந்நாட்டில் நிலைபெறவேண்டும் என்ற எண்ணம் அற்ப சொற்பமாவது ஆட்சியாளருக்கு இருந்தால், பத்திரிகைத் தணிக்கையை தாமதமின்றி நீக்கி, மக்கள் தங்கள் கருத்தை வெளியிடும் சுதந்திரத்தை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(7)

## 'ஐயம்' அகற்றுவீர்



# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

**கோவை-மகேசன்**

திருச்சி தந்த பெரியவர், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களை இந்தக் கிழமை சந்திப்போம் என்று சென்ற வாரம் கூறியிருந்தேன் அல்லவா? அதற்கிடையில் சென்ற இதழில் நான் எழுதியிருந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்த ஒரு சில கருத்துக்களையிட்டு குப்பிளானைச் சேர்ந்த ப. சோமசுந்தரம் என்ற தம்பியொருவர் ஒரு சில பிரச்சினைகளையெழுப்பியுள்ளார்.

அவர் தனது கடிதத்தில் எழுப்பியிருக்கும் இதே கேள்வியை இதற்கு முன்பும் சிலர் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். எனவே தம்பி சோமசுந்தரத்தின் விருப்பப்படி அந்தப்பிரச்சினையை தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

சோமசுந்தரம் எழுதியுள்ள கடிதம் இதுதான்:—

அன்பின் அண்ணன் கோவைக்கு,

"தாங்கள் எழுதிவரும் "அண்ணாவின் தமிழ் நாடு கண்டேன்" கட்டுரை வாசிக்க வாசிக்க நெஞ்சம் நிறைகிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே அந்த கட்டுரையின் 13ம் தேதி தொடரில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுள்ளீர்கள். அந்த இடத்தினைப் பற்றிய ஒரு சிறு சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. அந்த சந்தேகம் என்னைப் போன்ற பல்லாயிரக் கணக்கான உங்களது அன்புத் தம்பிகளுக்கு — வாசகர்களுக்கு ஏற்படும் என்ற நினைவு என்னை தூண்டியதாலேயே, அதைப்பற்றி உங்களிடம் சிறு விளக்கம் கேட்க விரும்புகிறேன். நான் அதைப் பற்றிக் கேட்பதால் நீங்கள் என் மீது தவறான அபிப்பிராயமும் கொள்ளக் கூடாதென அன்புடன் வேண்டி, எனது சந்தேகம் என்ன என்பதை விளக்குகிறேன்.

"13ம் தேதிக்கட்டுரையின் ஒரு பந்தி "இப்படிப் பத்து பன்னிரண்டு வயதிலிருந்தே சுதந்திரனுக்கும் எனக்கும் 'காதல்' ஏற்பட்டு விட்டது" இத்தொடரிலிருந்து, முடிவில் இருக்கும் 'நான் ஒரு சோதிடன் அல்லவே" என்றிருக்கின்றதே அந்தப் பந்திக்குள்தான் எனது சந்தேகம்.

"சில மாதங்களுக்கு முன் 'விடுதலை' யிலும் எழுதியிருந்தார்கள் 'இப்படித்தான் தினபதியாரும் முன்பு பிரச்சாரம் செய்து வந்தார்" என்று! ஒரு கேள்விக்கு இப்படிப்பட்ட பதில் எழுதப்பட்டதாக நினைப்பு.

"தற்சமயம் ஏதோ காரணங்களுக்காக நீங்கள் சுதந்திரனை விட்டும் — தமிழரசுக் கட்சியை விட்டும் பிரிய வேண்டி வந்துவிட்டது. நீங்கள் அப்போது வேறு ஒரு பத்திரிகையின் ஆசிரியராகி [illegible] நான் பிறகு இன்று தினபதி [illegible] கொட்டிய கருத்துக்கள் போல — வெளியிடும் செய்திகள் போல நீங்களும் இன்று எழுதிவரும் உணர்ச்சித் துடிப்புள்ள 'அரசியல் மடல்' கட்டுரைகள் என்பனவற்றையெல்லாம் — எழுதிய எழுத்துக்களை எல்லாம் மறந்து தமிழரசுக் கட்சிக்கெதிராக — சுதந்திரனுக்கு எதிராகவுன் எழுத மாட்டீர்களென விரும்புகின்றேன். நீங்களும் திசை மாறித் தடுக்கி விழுந்து இனத் துரோகியாக மாறலாம் என்று நான் — என்னைப்போன்ற பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் நினைக்கலாம் அல்லவா?

'அப்படி நீங்கள் மாறமாட்டீர்கள் என்பதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அந்த உத்தரவாதமும்' அண்ணாவின் தமிழ் நாடு கண்டேன்' கட்டுரையிலேயே விளக்க வேண்டுகின்றேன்.

அண்ணா, இதை நான் விளையாட்டுக்குக் கேட்கவில்லை; ஒரு 'தமிழரசுத் தொண்டன்' என்ற முறையிலேதான் கேட்கிறேன்.

உங்கள் விளக்கத்தை அடுத்து வரும் இதழில் வெளியிடுவீர்கள் என நம்பும் உங்கள் அருமைத் தம்பி

ப. சோமசுந்தரம்,

குப்பிளான்.

இதுதான் தம்பி சோமசுந்தரம் எனக்கு எழுதியுள்ள கடிதமாகும். என்பால் பாசம் வைத்துள்ள தம்பி சோமசுந்தரமும், அவர் போன்ற ஆயிரக்கணக்கான இளம் இதயங்களும் இப்படியொரு கேள்வியை கேட்பதில் நியாயம் நிரம்ப உண்டு. ஏனெனில் கொள்கை மாறுவதும், கட்சி மாறுவதும், நமது சமுதாயத்தில் நாளாந்த நிகழ்ச்சிகளாகி விட்டன.

இப்படியொரு சந்தேகம், ஐயப்பாடு, மனக்கிலேசம்— இளைஞர்களிடையேயும், தமிழ் பொதுமக்களிடையேயும் ஏற்படுவதற்கு மூல காரணமாக இருப்பவர் இன்றைய தினபதி ஆசிரியரே. அவர், சுதந்திரனில் ஆசிரியராக இருந்த நாட்களில் எழுதித்தள்ளிய உணர்ச்சி முறுக்கேற்றும் எழுத்துக்களால் கவரப்பட்டு, விடுதலைத்தாகம் கொண்டு, இலட்சியப்பாசறையாம் தமிழரசுக்கட்சியில் தம்மைப் பிணைத்துக்கொண்டோர் பல்லாயிரவர். அந்த மக்கள் அன்றிலிருந்து இன்று வரை விடுதலைப்பாதையில் வீராவேசத்துடன், சென்று கொண்டிருக்க—யார் எழுதிய எழுத்து அத்தகைய வீராவேசத்தை அவர்களுக்கு ஊட்டியதோ, அவரே இன்று பச்சை இனத்துரோகியாக மாறி தமிழின விடுதலைப் போராட்டத்தை நசுக்கிடவும் தமிழர் விடுதலைப் பாசறையாம் தமிழரசுக்கட்சியை சிதைத்திடவும் திட்டமிட்டு சூழ்ச்சிகளும், சதிகளும் புரிந்து வருவதை தமிழினம் இன்று கண்டு அவர் மீது காறியுமிழ்ந்து வருகிறது.

> "தலையினிழிந்த மயிரனையர் மாந்தர்
> நிலையினிழிந்தக் கடை"

என்று வள்ளுவர் கூறியதற்கு எடுத்துக் காட்டாக தம் நிலையிலிருந்து—இலட்சியத்திலிருந்து விலகிய அவர் மக்களால் ஒதுக்கப்படும் நிலையை இன்று காண்கின்றோம்.

தினபதி ஆசிரியர் இன்று இனத்துரோகியாக மாறி தமிழ் விடுதலை இலட்சியத்தை வேரோடு வெட்டிச் சாய்க்க முயலுகிறார் என்றால்—அவர் அன்று சுதந்திரனில் எழுதிய எழுத்துக்கள் உள்ளத்திலிருந்து எழுந்தவையே அல்ல; சுதந்திரனில் 'உத்தியோகம்' பார்ப்பதற்காக எழுதப்பட்ட எழுத்துக்களே அவை யென்று நான் கருதுகிறேன்.

உள்ளத்திலிருந்து—அந்தரங்க சுத்தியுடன் அவர் அன்று எழுதியிருந்தாரென்றால், இன்று திசைமாறி, பாதைமாறி, தமிழினத் துரோகியாகியிருக்கமாட்டார்.

தினபதியார் மட்டுமல்ல—'சிறீ அளித்த சிறை' யென்று நாலெழுதி விட்டவர்களும், 'தாங்கையிலே வாங்குகிற மூச்சு-கூழி மாறிப் போனாலே போச்சு' என்று, தமிழரசு மேடைகளிலே கர்ச்சித்தவர்களும் கூட இன்று பாதை மாறி விட்டார்கள்.

இதையெல்லாம் பார்க்கும் போது சிலருக்கு என் மீதும் சந்தேகம் ஏற்படுவது இயற்கை—இது கண்டு நான் ஆயாசப்படவில்லை.

என்னைப்பொறுத்த அளவில் முதலில் தமிழரசுக் கட்சியின் அடிமட்டத் தொண்டனாக இருந்தவன்—இன்றும் இருப்பவன். பள்ளிப்பருவத்திலேயே தமிழரசு இயக்கத்துடன் என்னை இணைத்துக் கொண்டு விட்டவன்.

நான், தமிழரசுக்கட்சியில் தீவிர மொழியுணர்விலும், இன விடுதலைத்தாகத்தாலும் உந்தப்பட்டு என்னைப் பிணைத்துக் கொண்டுவிட்டவன். தமிழரசுக் கட்சிக்காரன் என்ற ஒரே காரணத்தால், எத்தனையோ வசதி வாய்ப்புக்களை நான் இழந்திருந்தாலும், அதுபற்றி என்றுமே கவலைப்படாதவன்.

எனவே என் ஆயுள் இருக்கும்வரை நான் முழுக்க முழுக்க தமிழரசுக் கட்சிக்காரனாகவேயிருப்பேன். இதை என் தாயின் மீது ஆணையிட்டு ஜயப்படும் நண்பர்க

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கண்ணினும் இனிய சுதந்திரத்தைப் பெற

# எந்த விலையையும் தருவோம்!

## மனிதர்களாக நாம் வாழ்வதற்கு தமிழரசு நிறுவுவதே ஒரே வழி!"

### இராசமாணிக்கம் தலைமையுரை இறுதிப் பகுதி

(சென்றவாரத் தொடர்ச்சி)

நண்பர்களே, இந்த அரசாங்கத்திஞல் தயாரிக்கப்பட்டு, அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அரசியற்றிட்டம் எவ்வித குறிப்பிடத்தக்க மாற்றமுமின்றி ஏற்றுக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கலாம். இந்த அரசியல் அமைப்பின் கீழ் தமிழ்மக்களுடைய நிலை என்ன என்பதை நான் சுருக்கமாக ஆராய விரும்புகிறேன். இன்றைய ஒற்றையாட்சி அமைப்பு குடியரசுத் திட்டத்தின் கீழும் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. பெரும்பான்மை சிங்கள ஆட்சியில் தமிழினத்தின் அடிமைத்தனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதே இதன் கருத்தாகும்.

#### இரண்டாந்தரப் பிரஜைகள்

பௌத்த மதம் அரசாங்கத்திஞல் பேணிப்பாதுகாக்கப்பட்ட மதமாகவும், ஏனைய மதங்கள் புறக்கணித்து ஒதுக்கப்பட்ட மதங்களாகவும் இருக்கும். பௌத்தம் அல்லாத ஏனைய மதத்தைச் சேர்ந்தோர் இந்நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகள் என்பது ஊர்ஜிதமாகும். தனிச் சிங்களச் சட்டம் அரசியல் அமைப்பில் ஓர் அங்கமாகும்; 1956ம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களிஞல் ஏகோபித்து எதிர்க்கப்பட்ட இச்சட்டம் வருங்காலத்தில் எவ்வித மாற்றமும் பெறுவதற்கு இடமில்லாத வகையில் அரசியற் சட்டத்தில் இடம் பெறப் போகின்றது;

#### ஏமாற்றும் முயற்சி

1958ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி உபயோகச் சட்டம் அதன் கீழ்ச் சட்ட விதிகள் ஆக்கப்படாவிட்டால் நடைமுறைக்கு வரமுடியாத ஒரு சட்டமாகும். 1966ம்ஆண்டு எம்முடைய வற்புறுத்தலிஞல் ஆக்கப்பட்ட சட்டவிதிகளையும் செல்லாக்காசாக்கி இவ்வரசாங்கம் உதாசீனம் செய்து வருகின்றது. இதிலிருந்து தமிழ்மொழி உபயோகச்சட்டத்தையிட்டு அரசியற் திட்டத்தில் கூறப்பட்டிருப்பது தமிழ் மக்களை ஏமாற்றும் முயற்சியேயன்றி எவ்வித உரிமையையும் அளிக்க மாட்டாது என்பது உறுதி;

#### நீதிமொழி சிங்களம்

இலங்கை முழுவதிலும் சிங்களமே நீதி நிர்வாக மொழியாக விதிக்கப்பட்டிருக்கிறது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் புதிய தேசிய சபை விரும்பிஞல் வேறு ஒழுங்குகள் செய்யலாம் என்று கூறுவதைத் தவிர, பதிவேடுகள் முதலியவற்றைத் தமிழில் வைப்பதற்கு எவ்வித இடமும் அளிக்கப்படவில்லை; தேசிய சபை விரும்பி வேறு சட்டத்தை இயற்றுவிட்டால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில்தானும் சிங்களமே நீதிமன்றங்களின் பதிவு மொழியாக இருக்கும். வருங்காலத்தில் அரசாங்கங்களோடு பேச்சு வார்த்தைகள் மூலம் தமிழ் மொழியுரிமையைப் பெறுவதாயிருந்தாலும், 3/2 பெரும்பான்மையின்றி அதை நிறைவேற்ற முடியாத வகையில் வருங்கால அரசாங்கத்தின் கைகளும் கட்டப்பட்டிருக்கும்;

எந்த நாட்டின் அரசியற் திட்டத்திலும், குடியுரிமை பற்றிய பகுதி முக்கிய இடத்தைப் பெறும். இன்று நடைமுறையில் இருக்கும் குடியுரிமைச் சட்டங்கள் தமிழினத்திற்குப் பாதகமானவை என்று இன்றைய அரசின் அங்கமாயிருக்கின்ற இடதுசாரிக் கட்சிகளே ஒப்புக்கொண்டிருக்கின்றன. இக்குடியுரிமைச் சட்டங்கள் நடைமுறையில் ஏற்படுத்



தும் கஷ்டங்களைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கம் நியமித்த குழுவே சிபார்சு செய்திருக்கின்றது; இக்குறைபாடுகளையெல்லாம் அறிந்தும் புதிய அரசியற் திட்டத்தில் குடியுரிமைபற்றி எதுவும் கூறப்படவில்லை; இதன் ஒரே காரணம் இன்றைய அநீதியான குடியுரிமைச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் தமிழ் மக்களை நாடற்றவர்களாகவும், சந்தேகப் பிரஜைகளாகவும் அல்லலுறச்செய்வதே; புதிய அரசியற் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகள் அதே விதியின் இரண்டாவது பாகத்திஞல் பயனற்றவையாக்கப் பட்டுள்ளன. அன்றியும் இந்நாட்டில் பாரம்பரியமாக அநீதிக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் சாதியிஞல் உரிமை குறைந்த மக்களுக்கு பாதுகாப்பளிக்கக் கூடிய எவ்வகைச்சட்டமும் அரசியற் திட்டத்தில் இடம் பெறவில்லை, பிரஜைகளுக்கு மாத்திரமே உரியவையாக்கப் பட்டிருக்கும் அடிப்படை உரிமைகள் இந்நாட்டின் சந்தேகப் பிரஜைகளாக வாழும் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பளிக்குமா என்பது சந்தேகமே;

#### அற்பசொற்ப பாதுகாப்பும் இல்லை

இன்று நடைமுறையிலிருக்கும் சோல்பரி அரசியற் திட்டம் தமிழ் மக்களுக்குப் பாதகமானது என்பதை அன்று தொடக்கம் நாம் கூறிவந்தோம். புதிதாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் அரசியற்றிட்டம் இன்றைய திட்டத்தில் உள்ள அற்ப சொற்ப பாதுகாப்புகளையும் அகற்றிவிடுகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்; ஒரு இனத்தவருக்கு அல்லது மதத்தவருக்குப் பாதகமாகவோ, ஒரு இனத்தவர் அல்லது மதத்தவருக்கு விசேஷ சலுகைகள் அளிக்கக்கூடிய வகையிலோ எச்சட்டமும் இயற்றக் கூடாது என்று இன்றைய சோல்பரி அரசியற்றிட்டத்தின் 29 வது விதி கூறுகின்றது; புதிய அரசியற்றிட்டத்தில் இப்பாதுகாப்பும் நீக்கப்பட்டிருக்கிறது; மாத்திரமன்றிப், பௌத்த மதத்திற்கும் சிங்கள மொழிக்கும் விசேச உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஏற்கனவே நான் விளக்கியிருக்கின்றேன். இவற்றிலிருந்து புதிய அரசியற் திட்டம் தமிழினத்தின் அடிமைத்தளையை மேலும் இறுக்கிப் பிணைக்கின்ற இரும்பு விலங்கென்பது புலனாகின்றது;

'சிங்கள மக்கள் தாம் அந்நிய ஆதிக்கத்திலிருந்து பூரணமாக விடுதலை பெறும் வைபவத்தை தங்கள் புராதன இராஜதானியாகிய கண்டியில் கொண்டாடப் போகின்றார்கள். 1815ம் ஆண்டு மார்ச்சு மாதம் 2ம் திகதி, கண்டியில் இறக்கப்பட்ட சிங்கள இறைமையின் சின்னமாகிய சிங்கக்கொடி இவ்வாண்டு மார்ச் மாதம் 2ம் திகதி மீண்டும் அங்கு ஏற்றப்படப்போகின்றது. சிங்கள மக்கள் தம் இழந்த உரிமையை மீண்டும் பெறுவதை நாம் ஆட்சேபிக்கவில்லை; அதை வரவேற்கின்றோம். ஆஞல் அவர்கள் தம் உரிமையை முழுமையாகப் பெறுகின்ற அதே செயலிஞல் தமிழினம் முழுமையாக அடிமையாக்கப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

#### ஒரே கேள்வி

தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த இராஜதானியாகிய யாழ்ப்பாணத்தில் கூடியிருக்கும் உங்களைப்பார்த்து, நான் கேட்க விரும்புவது ஒரேயொரு கேள்விதான். சிங்கள மக்கள் தாம் இழந்த இறைமையை மீண்டுப் பெற்றது

(9-ம் பக்கம் பார்க்க)

---

# இரசிகமணிக் காய்ச்சல்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் கலாசாரப் பேரவை நடாத்திய இலக்கிய விழாவில் ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு என்ற பலரது குளறல்களும், இலக்கியப் பேச்சாகப் 'பெரும் மனிதர்'களது கைகளின் உதறல்களும் நல்ல நகைச்சுவை அளித்தன.

தமது கலை, கலாச்சாரங்கள் மாண்டுபோக தமிழர்கள் இங்கு அடிமைகளாய் வாழ்ந்து கலப்புச்சாதியாகி பூண்டோடு அழிய வேண்டும் என்பதற்குப் புதிய அரசியல் சாசனத்தில் குழிதோண்டப்பட்டமையை 'ஒருமைப்பாட்டுக் குளறிகள், நன்கு அறிவார்கள். வயிற்றைக் கழுவவும் எழுத்துப்பிழை, கருத்துப் பிழை விட்டு தமிழை எழுதி அதுவே புதுமை எழுத்து என்று தமது தமிழ் வறுமை நிலைக்கு மற்றவர்களையும் இறக்கித் தொழில் நடத்தும் 'வைக்கோல் எழுத்து' 'ஆசிரியர்'களும் மந்திரிமார், அரை மந்திரிமார்களின் பக்கத்தால் போஞலே கைலாசத்தைக் கண்டது போன்ற பாக்கியத்தைப் பெற்றுப் பூரிப்பதால் ஒருமைப்பாடு பற்றிக் குளறும் திருத்தொண்டை அவர்கள் செய்கிருர்கள்.

இவர்களின் ஒருமைப் பாட்டுகுளறலின் 'இலட்சணத்தை' மேற்படி விழாவிற்கு அச்சிட்ட மலர் புட்டுக்காட்டி விட்டது! அம்மலரில் 'குழு' மனப்பான்மை காட்டும் குழுவினரே சொந்தப் பெயரிலும், புனைபெயரிலும் தமது 'புலமையைக் காட்டியிருக்கின்றனர். இங்கு தரமான எழுத்தாளர்கள் பலர் இருக்கின்றனர் என்று நீங்கள் வாய்விட்டுக் குளறிக்கொண்டு மனதால் அதை மறுக்கிறீர்களா? புனை பெயரில் எழுத வேண்டிய எழுத்தாளர் பஞ்சமா உங்களுக்கு?

'அம்பலத்தான்' என்ற புனை பெயர் சூட்டி அந்தரங்கில் மறைந்து நின்று கைலாசபதி அம்மலரில் எழுதிய கட்டுரையில் நீர் குடிக்கும் கலைமானை 'ஒழி'யில் பதுங்கியிருந்து தாக்கும் வேடனின் செயல் போல இரசிகமணி கனக செந்திநாதனைத் தாக்கியுள்ளார்.

கைலாசபதி கலாநிதி சான்றிதழ் பெற்றவர் என்பதால் அவர் இலக்கியங்களை மெத்தப் படித்திருப்பார் என்று நம்புவதற்கு அவரது சான்றிதழே சான்று.

அவர் தமிழ் இலக்கிய உலகிற்கு நல்ல தொண்டு செய்ய [illegible] 'சரக்கில்லாத' [illegible] ஒரு எழுத்தா[illegible] மூல்போல் எடுத்ததற்கெல்லாம் இரசிகமணி கனக செந்திநாதனையே திட்டுந் தொழிலை ஏன் செய்ய

**இலக்கிய உலகு**

**-"வேதாளம்"-**

வேண்டும். என்பது பின்புதான் தெளிவாகியது;

இரசிகமணி வேறு புத்தகங்களின் மேற்கோள்களையும், நூல்களின் பட்டியலையும் அடுக்கிவிட்டு விமர்சனம் என்று சொல்பவரல்லர்; அவர் உண்மையில் இரசிகமணி தான் என்று உண்மை கைலாசபதியைச் சுட்டுவருகின்றது. நான் கல்லிலே நார் உரித்தாலும் உரிப்பேன் — எனது தமிழ் நடையோ வாதநடையைவிட்ட பாடில்லையே என்ற பொருமலால் அன்ஞர் 'இரசிகமணிக் காய்ச்'சற்கசாயம் குடிக்க விட்டார்!

இரசிகமணியின் மாண்[illegible] தமிழ் இலக்கிய உலகமும், தமிழ்நாட்டு இலக்கிய உலகமும் நன்கறியும் அதனை எந்தக் காய்ச்சல் போர்வையாலும் மூடி மறைக்க முடியாது.

ஆஞல் ஒருவிடயத்தை மட்டும் கைலாசபதியிடமும் கலாச்சாரப் பேரவைப்பசிசோந்திகளிடமும் நான் கேட்கிறேன்! தமிழர் அடிமைகளாக சிங்களவரிடமும் ஒருமைப்பாட்டை மடிக்குள் வைத்துக் கொண்டு போகவேண்டுமென்று முன்னுக்கு நிற்பவரின் முகத்தில் எச்சில் பறக்க நீங்கள் கத்துகிறீர்கள். ஈழத்து தமிழ் இலக்கியத்திற்கு தனது வாழ்வை அர்ப்பணித்துச் சேவையாற்றிவரும் இரசிகமணியுடன் உங்களால் ஒருமைப்பாடு காணமுடியவில்லை. அவர் உங்களுடன் என்ன சோலிக்கு வந்தார்? அவரின் சேவைக்கு நீங்கள் செய்யும் 'மதிப்பு' தாக்குதல்! 'குழு' பேதங்காட்டி சிறந்த எழுத்தாளர்களை இருட்டடிப்புச் செய்வது உங்கள் குணம். அதை இவ்விழா மலரிலும் காணலாம்.

'ஒருமைப்பாட்டுக்குளறிகளே! இருண்ட உள்ளம் படைத்த நீங்கள் ஒருமைப்பாடு பற்றிப் பேசுவது வயிற்றுக்காக, தொழில் நடாத்த, கல்வியில்லாத அறிவால் பிரமுகராக வரலாம் என்ற நப்பாசையை நிறைவேற்ற இவைகளை எல்லோரும் அறிவர்!

இந்நாட்டு எழுத்தாளரை மதிக்கவேண்டும் என்று குளறும் நீங்கள் அவர்களை 'குழு' அளவில் மதிப்பதையும் தாக்குவதையும் அறிவோம் விழா மலர் அதற்கு சிறு சாட்சி.

இந்நாட்டுச் சஞ்சிகைகளை வாங்குங்கள் என்று இலர் குளறுகிறீர்கள் இப்படிக்குளறும் ஒரு 'இருட்டு ஆசிரியர்' ஈழத்துப்பத்திரிகைகளை காசு கொடுத்து வாங்குவதில்லை, நூல் வெளியிட்டு விழாக்களுக்குப் போஞல்கூட பத்துச் சதம் விலையாஞலும் ஒரு ஈழத்து நூலை அவர் இதுவரை வாங்கியதில்லை; அவரின் குளறல் அர்த்தம் என்னவென்ருல் நான் வைக்கோல் நடையில் எழுதும் பத்திரிகையை வாங்குங்கள் என்பதேயாகும்!

ஈழத்து எழுத்தாளர் என்று முதலைக்கண்ணீர் வடித்து உங்களை நீங்களே தலைவராக மதித்து, உங்கள் தனிப்பட்ட காரியங்களைச் சாதிக்க முயற்சி செய்யும்வேகத்தில் மக்கள் மத்தியில் பேசும் பேச்சை மறந்து இரசிகமணி போன்ற எழுத்தாளரை மதிக்காவிட்டாலும் இட்டாமலாவது விட்டால் ஓரளவு பண்பாக இருக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் ஏழைகள்...!

நல்லை பத்மகாந்தன்

எமது சிறுகதை

'பார்த்தியே மோனே, கூடப்பிறந்ததே உன்னை தள்ளி வைச்சிட்டுது.'

'அதுக்கென்னணே செய்யிறது பணம் செய்யிறவேலை'

'பணம்...... கண்டறியாத பணம்...... உவையெல்லாம் பரம்பரை பணக்காறரே...... நானறிய இருக்கிறதிற்கு ஒரு துண்டுக் காணி இல்லாமல் கொழும்பிற்கு ஓடிப் போனவையள்...... இப்ப பெரிய பணக்காரர் ஆயிட்டினமாக்கும்...... என்ன வந்தாலும் மோனே இருந்த நிலையை மறக்கக் கூடாது...'

அந்த ஏழையின் உள்ளத்திலிருந்து தான் இந்தப் பொன்மொழி எழுந்தது... செல்லாச்சிக் கிழவிதான் பேசினாள்... அதுவும் எனக்குப் புரிந்து பேசினாள்...... அவள் ஏழையல்லவா...? அதுதான் என் நிலைமை அவருக்குப் புரிந்திருக்க வேண்டும்...... ஏழைகளைப்பற்றி அவர்கள் இரத்தத்தை... சொத்தை... ஏப்பம் விடக் காத்திருக்கும் பணக்காரன் பரிதாபப் படுவானு...? மண்குடிசையை... மாளிகைவாசன் வரவேற்குமா...? ஏழையைப்பற்றி அவர்களின் உணர்ச்சிகளை ஏழைகளால்தானே உணர முடியும்... அதுதான் அவள் எனக்காகப் பேசினாள். எனக்கு ஆறுதல் கூற அந்தக் கிழவியொருத்திதான் உண்டு.

அவள் ஒரு பழுத்த பழம்... வயது எண்பதை தாண்டியிருக்கும்... இன்றோ... நாளையோ... யமன் புசிக்க காத்திருப்பவள்... 'மோனே' என்று அந்தக் கிழம் வாஞ்சையுடன் அழைக்கும்போது சுருக்கங்கள் விழுந்த அவள் முகத்தில் மின்னி மறையும் அன்பை... பாசத்தை... பரிவை... என்னென்டு சொல்வது...... அவளுக்கு நான் ஒன்றும் பேரன் முறையில்லை... இருந்தாலும் செல்லாச்சி என்மீது காட்டும் ஆதரவு......!!

செல்லாச்சிக் கிழவியை சின்னனிலை இருந்தே எனக்குத் தெரியும்... அவளுடைய குடிசைக்குப் பக்கத்தில் நிற்கும் கறுத்தக்கொழும்பு மாமரத்தில் நானும் என்னுடைய பள்ளித்தோழர்களும் மாங்காய் பிடுங்கப் போறனுங்கள்... அப்பவே கிழவிக்கு என்னிலை நல்ல வாரப்பாடு. தாயைத்தின்னி என்டு சொல்லி எனக்கு நல்ல பழுத்த மாம்பழங்களை தன் கையாலேயே அறுத்துத்தரும்; சின்னவயதிலேயே என்னை விட்டு எங்கடை அம்மா செத்துப்போனதாலை என்னை எல்லோரும் தாயைத்தின்னி என்டுதான் அழைப்பார்கள்;

அவள் எது கொடுத்தாலும் வேண்டாம் என்று சொல்லாமல் வாங்கித்தின்பேன். தாய் அன்பை அறியாத எனக்கு செல்லாச்சியிடம் பழகும்போது என்னையறியாமலே ஒருவித பாசம் அவள் மேல் குடிகொண்டிருந்தது.

அந்தக் கிழவியிடம் நான் சாப்பிட்டதை பற்றி ஆரோ எங்கடை ஐயாட்டை சொல்லிப்போட்டினம். அன்று எனக்கு சரியான அடி. எனக்குச் சொல்ல முடியாத வேதனை... அடியின் வேகத்தில் அல்ல...

எனக்கு ஒவ்வொரு சனிக் கிழமையும் அடி விழுகிறது... ஏன் என்றால் எங்கடை ஐயா சனிக்கிழமையிலைதான் கனக்க கள்ளுக் குடிக்கிறவர்... எங்கடை அம்மாவிற்கும் ஐயா அடிச்சதால் சுகம் வந்து செத்ததாம்...... இதனாலை எனக்கு குடிக்கிறவங்களை கண்டால் பிடிக்காது...

செல்லாச்சியிடம் சாப்பிட்டதை ஆர்சொல்லியிருப்பினம்...? அவளிட்டை சாப்பிட்டால் என்ன...? அதுக்கு எனக்கு ஏன் ஐயா அடிச்சவர்...? இந்தக் கேள்விகள் என் இதயத்தைக் கிழித்துக் கொண்டிருந்தன...

அவன் கூடாத சாதியாம் அவையளை கோயிலுக்குள்ளை விடுகிறதில்லையாம்...... என் பள்ளித்தோழன்தான் இப்படிக் கூறினான்... மீன் தின்னுறவை... கள்ளுக்குடிக்கிறவை தான் கோயிலுக்கை போகக் கூடாதெண்டு எங்கடை வாத்தியார் சொன்னவர்... அப்படியென்றால் நாங்களுமில்லை கோயிலுக்கு போகப்படாது. நாங்களும் மீன் தின்னிறனாங்கள்தானே......! என்றாலும் ஐயாவிற்குத் தெரியாமல் அவன் வீட்டை நான் போய் வந்து கொண்டிருந்தேன்...

அவளுக்குத் துணையாக ஒரு கிழவன் இருப்பான்...... அவன்தான் அவளுடைய புருஷனாக இருக்க வேண்டும். என் யூகம் சரியாகத்தான் இருந்தது. செல்லாச்சி மாதிரி அவனும் என்மீது நல்ல வாஞ்சை, எங்களுடைய வீட்டுக்குப் பின்னால் உள்ள வடலியில்தான் கள்ளுச் சீவிறவன், சில நேரங்களில் எனக்கு இளநீர் வெட்டித்தருவான், இதனால் அவன் மேல் எனக்கு தனிப்பட்ட அன்பு உதயமாகிக் கொண்டிருந்தது.

எங்களுடைய வேலி அடைப்பதும் கதியால் போடுவதும் கிணத்துத் துலா போடுவதும் அவன்தான். துலாப் போட்டாலும் துலாக் கொடியை தொடமாட்டான். இது எனக்கு விசித்திரமாக இருக்கும். எங்கடை வீட்டிலை வேலை செய்யும்போது அவனுக்கு சோடாப் போத்தலிலேதான் தேத்தண்ணி குடுபடும். சில நேரம் நானும் கொண்டுபோய் குடுப்பேன். தேத்தண்ணியை வாங்கி கொடுப்புக்குள்ளை கிடக்கும் வெத்திலை சக்கையை துப்பிவிட்டு மடக்... மடக்... என்று அவன் குடிப்பதை பார்க்க எனக்கு வேடிக்கையாக இருக்கும்.

கொஞ்ச நாளாய் அவனைக் காணவில்லை. கள்ளுச் சீவவும் அவன் வருவதில்லை. அவன் கட்டிய இரண்டு முட்டிகளும் தென்னை மரத்தில் அப்படியே இருந்தன.

எங்களின்ரை பள்ளிக்கூடம் விடுதலை விட்டபடியினால் செல்லாச்சி வீட்டிற்கு நான் செல்ல முடிவதில்லை. பள்ளிக்கூடத்திற்கு போற வழியிலேதான் அவள் குடிசையும் இருந்தது. கொஞ்ச நாள் செல்ல வேறையொரு மொத்தமான ஆள் வந்து கள்ளுச் சீவிக்கொண்டு போனான்.

செல்லாச்சியின் புருஷன் மரம் ஏறேக்கை விழுந்து செத்துப் போச்சுதாம்; அதற்காகத்தான் தான் சீவுவதாக அடுத்த வீட்டு கந்தையாவிடம் சொல்லிக் கொண்டிருந்தான் அவன்; கந்தையாவிற்கு முகம் கறுத்துப்போச்சுது. முத்தன் செத்த துக்கத்தில் அல்ல தனக்கு வாடிக்கை இல்லாமல் போச்சுதெண்ட கவலை அவருக்கு! பாவம் முத்தன். செல்லாச்சியின் புருஷனின் பெயர் — எனக்கும் இவை கதைக்கேக்கைதான் தெரிய வந்தது;

கிழவி பாவம்; இனித்தனியத்தானே இருக்கும். அவள் இனி அனாதைதானே; அவளுக்கு ஒரு மகள் இருந்தவளாம். அவளை சின்ன வயதிலை அம்மை வந்து அள்ளிக் கொண்டு போச்சுதாம்; இதை பலமுறை அழுது கொண்டு எனக்குச் சொல்லியிருக்கிறாள்.

"என்னடா தம்பி முகட்டை பார்த்துக்கொண்டிருக்கிறாய்? எத்தினை ஒட்டை யெண்டே எண்ணுறாய்? மெய்ஞ்ச இஞ்ச வரியமாகுது."

கடந்த காலத்தை கண்ணுக்குள் கொண்டுவந்து ரசனையில் மூழ்கியிருந்த என்னை செல்லாச்சியின் குரல் நிகழ்காலத்திற்கு இழுத்து வந்தது.

"கொக்காவும் உனக்குச் சொல்லவில்லையே மோனே; அவள் என்ன செய்வாள் பாவம்; வளர்த்தவயின்ரை வரம்புக்குள்ளை தானே நிண்டு ஆடவேண்டும்; சின்னனிலை உன்னையும் அவளையும் பார்க்கவேண்டும். உன்ரை தோழிலை கைபோட்டு அணைச்சுக்கொண்டு வரேக்கை. ஆற்றை கண் பட்டுதோ... இப்படிப் போனியள்... பெத்தவள் இருந்தால் இப்படி எல்லாம் நடக்க விடுவாளே... அந்தத் தெய்வத்தைத்தானே கொப்பர் கொன்று போட்டாரே... அதுக்கு விழுந்த அடி கொஞ்ச நஞ்சமே......"

"முந்தி மோனை நான் மா இடிக்க உங்க வீட்டை வாறனான்... அப்ப கொக்காவும்... நீயும் சின்னப்பிள்ளைகள்... கொம்மா சுடுசோத்தை போட்டுட்டாள் எண்டு கொப்பருக்கு வந்த கோவம்... அந்தப் புண்ணியவதியின்றை தலையிலே சோத்துப்பானையை தூக்கியெறிஞ்ச... அதுக்கு நடந்த சித்திரவதைகள் ... சொல்லமுடியுமே... அந்தக் குலக்கொடி கொப்பருக்கும் வந்து வாழ்க்கைப் பட்டுதே......"

செல்லாச்சியின் உதட்டிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு வார்த்தையும் என் உள்ளத்தை பிழிந்து கொண்டிருந்தது...என் கண்களில் நீர் பனித்ததை அவள் கண்டு விட்டாள்.

"அழாதையடா தம்பி உனக்கும் கடவுள் ஒரு வழியை விடுவார்தானே..."

ஆண்டவனிடம் அவளுக்கு அபார நம்பிக்கைபோலும்.

'கொப்பர் நேர்சீராய் இருந்தால் உப்புடியெல்லாம் வருமே...கொக்காவை அவையேன் கொண்டுபோகப் போகினம்... நீ ஏன் இஞ்சை கிடந்து அழுந்த வேண்டும்... எல்லாம் விதி...'

அவள் விதியின் மீது பழியை சுமத்தினாள்.

'விதியில்லையணை எல்லாம் சதி...'

விம்மலுக்கிடையே என் வாயிலிருந்து வெளி வந்தது அந்த வார்த்தை...

'அது சரி மோனை இப்ப எப்படி கொப்பர் முந்தின மாதிரித்தான் குடிச்சுப் போட்டு... ஆடுறரோ... மெய்யே தம்பி உன்னை ஒண்டு கேட்கவேணும் மெண்டு இருந்தனான்...கொப்புவை பொலிசு மாரி புடிச்சு அடிச்சாங்களாமே...என்ன சங்கதி...?'

வினாவிற்கு தக்க விடையை எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள் செல்லாச்சி.

'அம்மாவை கொடுமைப் படுத்தினதற்கு ஆண்டவனே தண்டிச்சிருக்கிறார்... [illegible]'

ஒருவித அலட்சியத்துடன் சொன்னேன்;

'சரியாச்சொன்னியடா மோனை அந்தப் புண்ணியவதி விட்டகண்ணீர்தான் அவரை இப்புடி ஆட்டி... அலைக்குது ...என்ன செய்தாலும் பெத்த தேப்பன் அல்லே...'

இரண்டுதோணியில் கால் வைத்தவள் நிலையில் பேசினாள் அவள்:

'என்னவோ ஐயாவைகாண எனக்குப் பிடிக்கிறதில்லை...' உள்ளதை உள்ளபடி அவளிடம் உரைத்தேன்:

'கொப்பர், கொக்காவின்ரை கலியாணத்திற்கு வரச்சொல்லிக்கூப்பிடேலையே...'

'அவர் சொல்லியே நான் போகவேண்டும்...' என்பதில் ஆணவம் கலந்திருந்தது.

'என்ன தம்பி...அவையளுக்கு அப்புடி உன்னைவெறுத்துப்போச்சே...நான் தப்பாமல் கடுதாசி போடுறன் என்டு சொன்னாய்...!!'

"எல்லாம் சரியத் தோடைதான் அவை செய்திருக்கினம்...நான் ஒரு பேயன்... வெளுத்ததெல்லாம் பால் என்டு நினைச்சுப் போட்டான்..."

ஏமாற்றத்தின் பிரதிபலிப்பு என்னிடம் நிறைந்திருந்தது;

'உன்னட்டை ஏதாவது கேட்டவையே... நானும் அறிஞ்சன்...ஏதோ காணிக்கு கையெழுத்து வைச்சுத்தரச் சொல்லி வையாம்...'

தான் அறிந்த வதந்தி உண்மைதானா? என்பதை அறிய முற்பட்டுக்கொண்டிருந்தது—அந்தப் பழுத்த பழம்;

'உண்மைதான் ஆச்சி எங்கடை அம்மாவின்ரை காணியிருக்குதல்லே...

'ஓம் செம்மணி வயல் வெளிக்கு போறவழியிலையல்லோ... முந்தி புல்லுப் புடுங்க அந்த வழியாலைதான் போறனான் ... நல்ல வரும்படி உள்ள காணியல்லே...'

'அதிலை எனக்கும் அக்காவிற்கும் பங்கு இருக்கு...'

'பின்னை தாயின்ரை சீதனக் காணியென்றால் பிள்ளைகளுக்குத்தானே ... பேந்து... தம்பி...

என் பேச்சுக்கு இடையில் புகுந்து சொன்னாள் செல்லாச்சிக் கிழவி.

'என்ரை பங்கையும் அக்காவிற்கு சாட்டுதல் பண்ணித்தரச் சொன்னவை...'

'அடி ஆத்தை... நல்ல ஞாயமாய் கிடக்கு ... நீ குடுத்துப் போட்டு தெருவிலையே நிற்கிறதாம்... உப்புடித்தான் அவன் சின்ராசனும் எழுதிக்கொடுத்துப் போட்டு இப்ப கோயில் மடங்களில் படுத்து எழும்புறானும்...'

மேற்கோள் ஒன்றை எடுத்துக்காட்டி என் பக்கம் வாதாடிக்கொண்டிருந்தாள்...

'நான் அதற்கு ஒன்றும் சொல்லேலை அன்றையிலிருந்து கடிதம் போடுவதை நிப்பாட்டிப்போட்டினமனை...'

ஏக்கத்துடன் அவளை ஏறிட்டு நோக்கினேன்.

'கண்டியே ... சும்மா வா அந்தக் காலத்திலை சொல்லி வைச்சாங்கள்' 'ஆறுகடக்கும்வரையிலைதான் அண்ணன் தம்பியெண்டு.'

உதாரணம் காட்டிப் பேசுவதில் அவள் ஒரு புலி.

'எனக்கு உந்தக்காணியிலையும்...பூமியிலையும் ஆசையில்லை... அக்காவிற்காக உயிரைக்கூடக் குடுத்திருப்பன்... சீ... கேவலம்... இரண்டு பரப்புக் காணிக்காக... இரத்த பாசத்தை எடை போட்டிட்டாங்கள் என்றுதான் வருத்தமணை.'

'நீ ஒண்டுக்கும் யோசியாதைமோனை...ஆண்டவன் அநியாயங்களை நெடுகலும் பார்த்துக்கொண்டிருக்க மாட்டான்...'

எனக்குத் தெம்பை ஊட்டுவதற்காக பேசினாள்.

அவை சொல்லிச்சினமாம் அவன் என்ன சீதனம் கொடுத்தவனோ... அவற்றை லட்சணத்திலே அவரை மாப்பிள்ளை தொழுதுக போட வேண்டுமோ... மெய்யனை, அக்கா எங்களோடையிருந்தால் எப்படி என்றாலும்கரை சேர்த்து விடுவன்தானே... அவையள் என்ன எண்ணத்திலை கொண்டுபோனவையாம்...?

வேதனையுடன் விம்மினேன்.

'அது அவையிலை குற்றம் இல்லை புதுப் பணக்காறர் அல்லே... அந்தத்தோஷம் விட்டுப் போகுமா...'

ஒருவித தனிவுடன் சொன்னாள் கிழவி.

'காப்பவுண் மோதிரத்திற்கு எனக்கு ஆசையில்லை... இவை இப்பத்தான் மோதிரத்தை கண்டிருப்பினம்... ஒருவேளை அவையளுக்கு ஆசையாக இருந்திருக்கும்... சின்னனிலை நாங்களும் இரண்டு கைக்கும் மோதிரம் போட்டுத்தான் வாழ்ந்தனாங்கள்... உவை மாதிரி மோதிரம் போட வேண்டும்...சங்கிலி கொழுவ வேண்டுமென்ற ஆசை எனக்கு இல்லை... காப்பவுணுக்காக என்ரை ஸ்தானத்தை வேறையொருத்தன் அபகரிக்கிறதெண்டால் நீயே... சொல்லு பார்ப்பம்...'

'பின்னை ஆருக்குத்தான் ஆத்திரம்வராது... இரத்த உரித்து நீ இருக்கேக்கை... வேறையாளை வைக்கிறதெண்டால்... பிறகேன் ஐயரை அழைச்சு... ஓமம் வளர்த்து... தாலி கட்ட வேணும்... அவையளின்ரை கொழும்பிலே இந்தக் கூத்துக்களை நடத்திருக்கலாமே...'

செல்லாச்சிக்கும் ஆத்திரம் பொத்திக்கொண்டு வந்தது...

'ஊரிலை என்ன கதைக்கிறுங்கள் தெரியுமேயணை... நான் எங்கடை ஐயாவிற்கும்... அம்மாவிற்கும் பிறக்கேலையாம்...'

இதைச் சொல்லும்போது எனக்கு அழுகையே வந்துவிட்டது.

'ஊர் ஆயிரம்சொல்லும்... உதுகளுக்கு காதுகொடுத்தால் நாங்கள் வாழமுடியாதடா.'

'அக்காவை கலியாணக் கோலத்திலை பார்க்க எவ்வளவு ஆசையை உள்ளத்திலை தேக்கி வைச்சிருந்தன் எல்லாத்திற்கும் கொடுத்து வைச்சிருக்கவேணும்... அதிகம் அன்புகொள்ளுகிறவன் அதிகமான கவலையை அனுபவிக்கத்தானே வேண்டும்...'

'தம்பி உன்னிலையும் பிழை இல்லை கொக்காவிலையும் குற்றம் சொல்ல இடமில்லை... இதெல்லாம் அவையளின்ரை கூத்துத்தானே... அதுதான் சொல்லுறது பிள்ளைகளை பெத்திருந்தாலும் தானே பாசம்... பரிவு... என்னெண்டு தெரியும்... 'கழுதைகளுக்குத் தெரியுமே கற்பூர வாசனை...' கோவிலைதானே

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் விடுதலைப் போராட்டத்தில் தமிழ் ஏடுகளின் கடமை!

## 'இனமுழக்கம்' விழாவில் அமிர்தலிங்கம் பேச்சு!

எந்தவொரு இனமோ அல்லது சமுதாயமோ வளர்ச்சி அடைய வேண்டுமாயின் அதற்கொரு இலக்கு வேண்டும். இலக்கு இல்லையென்றால் அதற்குரிய இடத்தை அடைந்துவிட முடியாது. தமிழினத்தைப் பொறுத்த மட்டில் இன்று 'விடுதலை' என்ற இலக்கை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றோம்; இந்தப் பயணத்தில் பத்திரிகைகளின் பணியே மகத்தானது. இன்றைய நிலையில் தமிழினத்திற்காக குரலெழுப்ப பத்திரிகைகளில்லை;

''தமிழினத்தை அழிக்க ஒரு கூட்டமே உருவாகியிருக்கின்றது. இந்நிலையில் தேசிய ஒருமைப்பாடு பற்றியும் பேசப்படுகின்றது. இரு இனமும் கலந்துவிட்டால் தேசிய ஒருமைப்பாடு உருவாகிவிடுமா? தனிச்சிங்களமென்ற பயிரை வேலிபோட்டுப்பாதுகாத்துக்கொண்டு வேலிக்கு வெளியே தமிழை வைத்து மாடு மேய்வதற்கு விட்டுவிட்டு இங்கு வந்து தேசிய ஒருமைப்பாடு பேசுவது வேடிக்கையாக இருக்கின்றது. ஒரு காலத்தில் தமிழரின் உரிமைக்காக வாதாடியவர், தமிழினம் உரிமையிழந்து நிற்கின்றதென்பதை மனதார ஏற்றுக்கொண்ட இரு டாக்டர் பட்டம் பெற்ற என். எம். பெரேராவிற்கு நாம் புதிதாக இணைப்பாட்சியைப் பற்றிப் பேச வேண்டுமா என்று கேட்கின்றேன்...

''சிங்கள மக்கள் மத்தியில் சென்று எமது கோரிக்கைகளை விளக்க வேண்டுமென்று இன்றும் சிலர் கேட்கின்றனர். இவர்கள் கடந்த கால வரலாற்றை அறியாமல் பேசுகின்றார்களா? கடந்த 1956ல் எமது கோரிக்கைகளை சிங்கள மக்கள் மத்தியில் சென்று விளக்கினோம். அமைதியான சத்தியாக்கிரகம் செய்தோம்; சகோதரத்துவத்தை விளக்கும் பிரசுரங்களைக் கொடுத்தோம். ஆனால் நடந்தது என்ன? எமது கோரிக்கைக்குப் பரிசு அடியும் உதையும்; தமிழினம் தனதுடைமைகள் யாவற்றையுமிழந்து கப்பல் ஏறவேண்டிய நிலைக்கு வந்தது; நாம் உரிமையைக் கேட்ட ஒரேயொரு குற்றத்திற்காகவென்பதை இனியாவது இப்படிக் கேட்பவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும்.

''தமிழ் பயிருக்கு நீர் பாய்ச்சும் கலாசாரத் தொடர்புக்கும் இன்று தடைக்கல் போடப்பட்டுவிட்டது. மதம் என்றால் போதை தரும் அபின் என்று முன்பு கூறியவர் இன்று மத அடிப்படையில் அரசியல் சாசனத்தை எழுதி அதை அப்படியே பருகுவதைக் காணமுடிகின்றது; இந்நிலையிலே தமிழினம் சிந்திக்க வேண்டியதென்ன ......? இந்நாட்டில் தமிழினம் வாழ வேண்டுமாயின் இனத்தின் மத்தியிலே வளர்ந்திருக்கின்ற களைப்புற்களை களைய வேண்டும். எமது மொழியுரிமையை நாமே போராடிப் பெறவேண்டிய நிலையிலிருக்கின்றோம். ஒன்றுபட்ட குரல் ... இடைவிடாத போராட்டம் ... இவைகள் மூலமாகத்தான் தமிழினம் தன் இழந்த உரிமையை பெறமுடியும். உரிமைப் போராட்டத்திற்கு 'இனமுழக்கம்' போன்ற விடுதலையுணர்ச்சியுள்ள ஏடுகள் பணிபுரிய வேண்டும்.''

இவ்வாறு தளபதி அ. அமிர்தலிங்கம் அவர்கள் உரைநிகழ்த்தினார். செ[illegible]வன். க. கலைச்செல்வ[illegible] தமிழ் வாழ்த்துடன் ஆரம்பித்த விழாவிற்கு அடலேறு மு. ஆலாலசுந்தரம் தலைமை வகித்தார். மாவை. சோ. சேனாதிராசா கடமை வீரர் வ. ந. நவரட்ணம், வண்ணை ஆனந்தன் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்; ஆசிரியர். வே. செழியன் நன்றி கூறினார்.

(''வண்ணை நிருபர் சண்'')

## அண்ணாவின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு கூறிக்கொள்ள விழைகிறேன். நான் கட்சியை விட்டு வெளியேறுவது என்பது இந்தப் பிறவியில் ஒரு போதுமே நடக்காது.

நான் தமிழரசுக்கட்சியில் சேர்ந்த நேரத்தில், சுதந்திரனில் பணியாற்ற சந்தர்ப்பம் கிடைக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டு சேர்ந்தவனல்ல—சுதந்திரன் ஆசிரியர் பதவி என்பது இடையில் வந்தவொன்று. அந்தப்பதவியைப் பயன்படுத்தி தமிழ் சமுதாயத்தை விடுதலையுணர்ச்சியுள்ள சமுதாயமாக்கி, விடுதலைப் பாதையில் கொண்டுசெல்ல, என் ஆற்றல், திறமை உழைப்பு அனைத்தையுமே அர்ப்பணித்து வருகிறேன்.

சுதந்திரனில் நான் பணியாற்றுவது ஊதியத்தை எதிர்பார்த்தல்ல— ஊதியத்துக்காக மட்டும் என்றால் இதைவிட கூடிய ஊதியமுள்ள வேறு ஏதாவது ஒரு வேலையை (னபதியார் போல) நானும் தேடிக்கொண்டிருக்கமுடியும் ஆனால் நான் என் வாழ்வை இனத்தின் விடுதலைக்காக என்றோ அர்ப்பணித்துவிட்டேன்; எனக்கு ஏற்படக் கூடிய அத்தனை துன்பங்களையும் நான் ஏற்றுக்கொண்டு இலட்சியத்துக்காக சகித்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்;

தப்பித்தவறி சுதந்திரனை விட்டு வெளியேற வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் கூட—எங்கோ ஒரு மூலையில் தமிழரசு இயக்கத்துக்காக உழைத்துக்கொண்டே இருப்பேன் என்பதை நண்பர்களுக்கு கூறிக்கொள்ள விழைகிறேன்.

சந்தேகம் தீர்ந்துவிட்டதா? சரி, இனி அடுத்த வாரம் மீண்டும் திருச்சி செல்வோம்!

—வளரும்

## குமாரசூரியர்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யக அடிப்படை மனித உரிமைகள் அரசியல் திட்டத்தில் வரையறுத்துச் சொல்லப்பட வேண்டுமென்று வற்புறுத்தினார்;

சம்பந்தப்பட்ட பிரேரணையை மாநகராட்சி மன்றத்தில் பிரேரித்தவரான திருமதி அ. சாமிநாதரும் தாம் கொண்டு வந்து சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட அதே தீர்மானத்தை அப்படியே அரசு ஏற்றுக்கொண்டு அரசியல் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அடித்துப் பேசினார்.

—

## சோசலிசக்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சோசலிச சமுதாயத்தை உருவாக்க முடியாது என்பதை நன்கு அறிந்தவர் லெனின். எனவே லெனின் குஞ்சுகளே உங்கள் நஞ்சுப் புத்தியை குழிதோண்டிப் புதைத்துவிட்டு, சிறுபான்மையோர் உரிமைகளைப் பெறமுயலும் இயக்கத்துடன் ஒத்துழையுங்கள். இல்லையேல் எக்காலத்திலும் இலங்கையில் சோசலிச சமுதாயத்தைக் காணமுடியாது.

## இன 'வியாபாரம்' செய்து பெற்ற மந்திரி பதவி!

''இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்காக எனக்கு இப்பதவி (மந்திரி பதவி) வழங்கப்பட்டுள்ளது.''

—குமாரசூரியர் (தினபதி 14-2-72)

## மறைந்த தலைவர்களுக்கு சிலை நிறுவ ஏற்பாடு!

மறைந்த தமிழ்த் தலைவர்களாகிய அமரர்கள் ஏகாம்பரம், இராஜவரோதயம் ஆகியோர்களுக்கு அடுத்த ஆண்டு சனவரியில் நடைபெறவிருக்கும் நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு முன் கிழக்கிலங்கையில் சிலைகள் நிறுவப்படுமென திருமலை ஔவையார் வீதியில் கூடிய அமரர் ஏகாம்பரம் நினைவுக்குழு முடிவுசெய்துள்ளது.

இக்கூட்டத்தில் அமரர் ஏகாம்பரம் நினைவுக்குழுவின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: காப்பாளர்கள்; திருவாளர்கள் பா. நேமிநாதன், அ. தங்கத்துரை, டாக்டர் வே. தம்பிஐயா, மு. கோ. செல்வராசா, த. முத்துதம்பி, வி. பூபாலபிள்ளை, ச. கோபாலகிருஷ்ணன்.

தலைவர்: திரு. த. அமரசிங்கம். செயலாளர்: திரு. ச. செ. கருணானந்தசாமி. பொருளாளர்கள்: திரு. மு. முருகையா, திரு. இ. சச்சிதானந்தவேல்.

—

## தமிழர் முன்னேற்ற கழகம் துவக்கவிழா

''தமிழர் முன்னேற்றக் கழகம்'' என்னும் பெயருடைய கழகம் ஒன்று எதிர் வரும் 20-2-1972 ஞாயிற்றுக்கிழமை அன்று பி. ப. 4 மணியளவில் கொழும்பு-14 லேயாஸ் ப்ரோட்வே ரோட்டில் அமைந்திருக்கும் ஸ்ரீ [illegible] மண்டபத்தில் [illegible] நடைபெறவுள்ளது.

## உலகத் தமிழ் மாநாடு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றையெல்லாம் அவதானித்த சிலர் கூட்ட நிகழ்ச்சிகளைத் தமிழில் நடாத்துமாறு குரல் எழுப்பினர். சபையில் தமிழில் நடத்துமாறு சிலர் முணு முணுத்தரேயன்றி, கூட்டத்தின் முன் தமது கருத்தை வற்புறுத்த முன்வராமல் வாழா இருந்தனர்;

ஆங்கிலம் நன்கு தெரிந்த வழக்கறிஞர்களில் ஒருவர் எல்லாம் ஆங்கிலமயமாக நடைபெறுவதை வன்மையாக எதிர்த்துரையாற்றினார். தமிழிலேயே நிகழ்ச்சிகளை நடாத்தினால் நல்லாக இருக்கும் என்றும் இடித்துரைத்தார். அவரின் தமிழ்ப் பேச்சின் பின்னர் அங்கு பேசிய பலரும் தமிழில் தமது கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தமிழில் நடந்தால் மெச்சத்தக்கதாக இருக்குமென்ற கருத்தையும் அன்றைய தினம் ஒருவர் வெளியிட்டுத் தமது கருத்தைத் தெரிவித்துத் தமிழில் பேசினார். தமிழாராய்ச்சி மாநாட்டை தமிழில் நடாத்துவதே மிகப் பொருத்தமானதென்ற கருத்தை அவ்வன்பர் ஆணித்தரமாக எடுத்துக்காட்டினார்.

உலகின் பல பாகங்களிலுமிருந்தும் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வருகை தருவோர் வசதிக்காக ஆங்கிலத்திலேயே மாநாடு நடக்க வேண்டுமென்று தலைவர் தமது எண்ணக் கருத்தை வெளியிட்டார். தமிழாராய்ச்சிக்கு வருபவர்கள் தமிழ் தெரிந்தவராகவே இருப்பர். தமிழில் பேசுவதிலும், எழுதுவதிலும் பரிச்சயமுள்ளவர்களாகவே அவர்கள் இருப்பர் மாநாட்டுக்கு வரும் தமிழறிஞர்களில் பலர் ஆங்கிலம் தெரிந்தவர்களாக இருக்க மாட்டார்கள்; எனவே மாநாடு தமிழில் நடைபெறுவதில் எதுவித கஷ்டமும், வெளிநாட்டுத் தமிழறிஞர்களுக்கு இருக்க மாட்டாதென்ற கருத்தை அன்றைய கூட்டத்திற்கு வந்திருந்த பலர் தெரிவித்தார்கள்.

ஆனால் மாநாடு ஆங்கிலத்திலேயே நடைபெறும் என்ற முடிவுடன் ஆலோசனைக் கூட்டம் முடிவுற்றது; மாநாடு ஆங்கிலத்தில்தான் நடக்கும் என்பதற்கு முன்னோடியாக ஆலோசனைக் கூட்டமே ஆங்கிலத்தில் நடைபெற்றுள்ளது. இதுவும் இலங்கைத் தமிழரின் துர்ப்பாக்கியமே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

—புத்தொளி

## சந்திரகாசன் தம்பதிகளுக்கு வரவேற்பு!

அண்மையில் திருமணம் செய்துகொண்ட வழக்குரைஞர் திரு. சந்திரகாசன்—சட்டக்கல்லூரி விரிவுரையாளர் செல்வி நிர்மலா தம்பதிகளுக்கு 28-2-72 மாலை 4 மணிக்கு யாழ் வீர சிங்கம் மண்டபத்தில் நண்பர்கள் ஒரு வரவேற்பு விருந்துபசாரத்தை அளிக்கவிருக்கிறார்கள்;

—

## மக்கள் மேயர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டால் ஒரு லட்சம் நட்ட ஈடு வழங்கும்படி மன்றத்தைப் பணித்திருப்பேனென முன்பு ஒரு நீதவான் தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டிருந்ததை மனதிற்கொண்டு வரியிறுப்பாளர் சங்கம் வாடிக்கைக்காரர் பலர் மூலம் வழக்குப் போட ஒழுங்கு செய்கிறதாம்.

—

தணிக்கை


### விலைப் பட்டியல்

| | மொத்த விற்பனை (ஒவ்வொன்றின் விலை) | சில்லறை விலை (ஒவ்வொன்றின் விலை) |
|---|---|---|
| அஸ்கோ மீடியம் | /80 சதம் | /95 சதம் |
| டியூ. பிளக்ஸ் | ரூபா 1/45 | ரூபா 1/70 |
| ஜெம்பிளவர் | /85 சதம் | ,, 1/ |
| பெட்ரும் (பிளெயின்) | /30 ,, | /35 சதம் |
| | டசின் விலை | ஒவ்வொன்றின் விலை |
| குளோறி H 909 தொங்கும் கண்ணாடி லாம்பு சிமினி | ரூபா 33/39 | ரூபா 3/20 |
| குளோறி பிரெஷர் லாம்ப் G 4 B | ரூபா 38/94 | ரூபா 3/75 |

**சேகரம் அன் சன்ஸ்,**

271, செட்டியார்தெரு, கொழும்பு—11.



கடமை

''தனது கடமைகளை சரி வர செய்பவர்கள் உயர் பதவி அடைகின்றார்கள்.''

ஞானி.

துரித சலவைக்கும், சிக்கன செலவிற்கும் மில்க்வைற் சலவைப்பவுடர் வாங்கிப் பாவியுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோசலிசக்குஞ்சுகளே! வாயை அடக்குவீர்களா?

## சோசலிசத்தின் தந்தை சுயநிர்ணய உரிமை கொடுத்து

## சோசலிச சமுதாயத்தை உருவாக்கியதை அறிவீர்களா?

இலங்கையில் தற்போதைய காலம் சோசலிச சமுதாயத்தை நோக்கிச் செல்வதாகக் கூறப்படுகிறது: ஆனால் எனக்கு ஒரு ஐயம் தோன்றுகின்றது. தற்போதைய அரசியல் போக்கில், ஆளுபவர்கள், ஆளப்படுபவர்கள் என, தேசிய இனத்தைப் பிரித்து இருக்கும் மட்டும் சோசலிச சமுதாயத்தை ஏற்படுத்த முடியுமா என்பதை இலங்கையின் சோசலிசவாதிகள் அறிவார்களா? இச்சோசலிச வாதிகளின் தந்தை லெனின் அவர்களே சிறுபான்மையோர் உரிமைகளை மதித்து அவர்கள் உரிமையைக் கொடுத்துத்தான் அவர்கள் ஒற்றுமையுடன்தான் சோசலிச சமுதாயத்தை உருவாக்கி சோசலிசத்தின் தந்தையானார் என்பதை அறிவீர்களா? நான் கூறப்போவதைத் தெரிந்து கொண்டாவது இனிமேல் தமிழ் மக்களை சோசலிசப் போர்வையில் ஏமாற்றுதிருக்கட்டும்.

சோவியத் நாட்டின் தொடக்க காலத்தில் தேசிய சிறுபான்மையோர் தொகை 50%க்கு அதிகமாக இருந்தார்கள். இவர்களுக்கு இலக்கிய மொழி அப்போது இருக்கவில்லை. பழைய மொழிகளில் எழுதப்பட்ட இலக்கியங்கள் கூட சமய நூல்களாகவே இருந்தன: ஜார் மன்னர்கள் காலத்தில் 25 சதவீதத்துக்கு மேல் எழுத்தறிவில்லாத பாமரர்களாகவே இருந்தார்கள்: இந்த நிலையில் சோசலிச சமுதாயத்தை உருவாக்கும் கனவு கொண்ட லெனின் அவர்கள் சிறுபான்மையோர் மேல் பரிவு அன்பு கொண்டவராக மனிததர்மத்தை மதித்து நடந்துகொண்டார். தாம் எழுதியுள்ள பலவகையான நூல்களிலே, லெனின் அடிக்கடி தேசிய சிறுபான்மையினர் பிரச்சினையைக் குறிப்பிடுவது உண்டு. எல்லா இலக்கிய மொழிகளும் பண்பாடுகளும் சமமாகக் கருதப்படவேண்டுமென்று வலியுறுத்தியதுடன் கட்டாய தேசிய மொழி ஒன்று தேவையே இல்லை என்று குறிப்பிடவும் முற்பட்டார்.

'பிராலிடாரிஸ் கஜா பிராவ்டா' என்னும் இதழில் 'கட்டாய அரசாங்க மொழி என ஒன்று தேவையா?' என்ற தலைப்பில் ரஷ்ய லிபரல் கட்சியின் மொழிக் கொள்கைக்கு எதிரான கருத்துக்களை விடுத்து பின் வருமாறு முடிவுரை வழங்கினுரென ஹெல்சின் பல்கலைக்கழகத் தத்துவப் பேராசிரியர் ரைரி—ஏ. போஸ்டி என்பவர் 'லெனினும் சிறுபான்மையோர் உரிமைகளும்' என்ற கட்டுரையில் விளக்கம் கொடுத்துள்ளார். அதாவது '......எனவே கட்டாய அரசாங்க மொழி என்று ஒன்று இருக்கக் கூடாது என்று ரஷ்ய மார்க்ஸிஸ்டுகள் கருதுகிறுர்கள். மக்களுக்கு எல்லா பிராந்திய மொழிகளையும் பயிற்றுவிக்கும் பள்ளிகள் இருக்க வேண்டும் என்றும் ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு இருக்கும் சலுகைகளை அறவே நீக்குவதற்கு அரசியல் சாசனத்தில் வழிவகை செய்யப்பட வேண்டும் என்றும் தேசிய சிறுபான்மையினரின் உரிமைகளில் தலையிடுவதற்கு சிலருக்கு அளிக்கப்பட்டிருக்கும் உரிமைகளை நீக்கிவிட வேண்டுமென்றும் அவர்கள் கருதுகிறுர்கள்.'

லெனின் அவர்கள் எழுதிய வேறு பல நூல்களிலும் சிறுபான்மையோர் உரிமைகளைக் கொடுத்துதற்தான் சோசலிச சமுதாயக் கட்டிடத்தின் சிறந்த அத்திவாரத்தைப் போடலாம் என்று எண்ணினுர். 1913ல் எழுதிய 'தேசியப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வுரை' என்ற நூலிலும் 1914ல் எழுதிய 'நாடுகளு[illegible] சுயநிர்ணய உரிமை' [illegible]ற நூலிலும் முன்னர் கூறிய கருத்தை விளக்கிக் காரணங்களை அளித்துள்ளார். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு லெனின் அவர்களால் கையொப்பமிடப்பட்ட 'ரஷ்ய நாட்டு மக்களின் உரிமைப் பிரகடனம் மக்கள் பிரதிநிதிக் குழுவினுல் வெளியிடப்பட்டது. அதில் பின்வரும் 4 குறிப்புகள் தேசிய சிறுபான்மையினர் கொள்கையின் அடித்தளங்களாக விளங்கினவென பேராசிரியர் சுருக்கிக் கூறுகிறுர்.

ரஷ்ய மக்கள் அனைவரும் சமம். அவர்கள் அனைவருக்கும் தன்னுட்சிக்கான முழு உரிமையுண்டு.

ரஷ்யக் கூட்டாட்சியிலிருந்து பிரிந்து தனி நாடு அமைக்கும் அளவிற்கு சுயநிர்ணய உரிமை ரஷ்ய மக்கள் அனைவருக்கும் உண்டு.

தேசிய சலுகைகள், தேசிய மத சலுகைகள் கட்டுப்பாடுகள் ஆகியவை அனைத்தையும் நீக்குதல்;

ரஷ்ய நாட்டில் வாழும் பல்வேறு தேசிய சிறுபான்மையினரும் இனக் குழுக்களும் சுதந்திரமாக வளரத் துணைபுரிதல்.

இதில் இரண்டாவதையொட்டி 1917 மார்கழி மாதம் பின்லாந்து நாட்டு சுதந்திர நாடு என அறிவிக்கும் அறிக்கையில் கையெழுத்தும் இட்டார்.

தேசிய சிறுபான்மையினரின் மொழி, பண்பாடு, ஆகியவற்றை வளர்க்க தீவிர

**முல்லை மயிலோன்**

மான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன: வடக்குத், தெற்கென்றே, மேற்குக் கிழக்கென்றே வித்தியாசம் காட்டவில்லை. வெறும் பேச்சு மொழிகளாக இருந்த பல மொழிகளுக்கு வரிவடிவில் ஒலியியல் அடிப்படையில் எழுத்துக்களை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பல நிபுணர்களையும், நிறுவனங்களையும் கொண்டு சிறுபான்மையினருக்கு சீர்திருந்திய எழுத்துக்களைக் கொடுத்ததுடன் சமூக நீதியின் அடிப்படையில் கல்விச் சீர்திருத்தங்களையும் செய்தார்.

இதனுல் ரஷ்யாவில் லெனினுடைய ஆட்சிக்குப்பின், லெனின் வகுத்த சிறுபான்மையினர் கொள்கையின் கண்டுள்ள எல்லா நாடுகளும், மொழிகளும் சமம் என்னும் கருத்து பல்வேறு சிறுபான்மையினரும் பண்பாட்டுத்துறையில் வளரவும் ஒரு சோசலிச சமுதாயத்தை அமைக்கவும் காரணமாக இருந்தது.

நாட்டில் அமைதி நிலவி ஒற்றுமை வளர்ந்தது. மக்கள் கவனம் பொருளாதார கண்ணேட்டமாகவே இருந்தது. கூட்டுறவுப் பண்ணைகள் அமைத்தார்கள். விஞ்ஞான அறிவை வளர்த்தார்கள். இதன் மூலமாக ஒரு சோசலிச சமுதாயத்தை உருவாக்க முடிந்தது.

ஆனுல் இலங்கையில் ஒரு சோசலிச சமுதாயத்தை உருவாக்கக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றதா? மொழியடிப்படையில், கல்வியில் பாகுபாடு, பண்பாட்டுச்சீர்திருத்தம், பொருளாதார அபிவிருத்தி என்பவற்றில் பாகுபாடு ஆட்சிக்கு எதிர் கருத்துத் தெரிவித்தால் அட்டுளியம், மண்டியிட்டால் மந்திரிப்பதவி. முண்டியிட்டால் பதவியுயர்ச்சி மறுப்பு;

எனவே மொழிப் பிரச்சினை தீரும் வரையும் அதாவது தமிழன் பிரச்சினை தீரும் வரையும் ஆளுபவர்கள், ஆளப்படுபவர்கள் என்ற பிரிவு மாறும் வரையும், உண்மையான ஜனநாயகம் வளரும் வரையில் எவராலும்

(7-ம் பக்கம் பார்க்க)

# "மலையகத் தமிழர்கள் தமிழரசுக் கட்சியில் ஏன் சேர வேண்டும்?"

## இ. தொ. கழக இராகலைக் கூட்டத்தில் பரராஜசிங்கம் விளக்கம்!

6.2.1972 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இராகலை இலங்கைத் தொழிலாளர் கழக பணிமனையில் நடைபெற்ற மாவட்டக்குழு தலைவர்கள், கூட்டத்தில், பிரதம பேச்சாளராக கலந்துகொண்ட கழகத்தின் புதிய சட்ட ஆலோசகர் திரு. எம். பரராஜசிங்கம் அவர்கள் நிகழ்த்திய உரைவருமாறு:-

"இந்த நாட்டில் வாழும் தமிழ்மொழி பேசும் மக்கள் ஏனைய மக்களைப் போல எல்லா உரிமைகளும் பெற்று தன்மானத்துடன், இழிச்சொல் இல்லாமல், அடிமைகளாய் இல்லாமல், மனித உரிமைகள் யாவற்றையும் பெற்று வாழவேண்டும்.

தணிக்கை

இதே நிலையில் மலைநாட்டு மக்கள் இன்று ஏன் தமிழரசோடு இணைய வேண்டும், எதற்காக கழகத்தின் வாயிலாக சேவை செய்ய தமிழரசு தலைவர்கள் முற்பட்டார்கள் என்பதை நன்கு விளக்கும்போது... மலைநாட்டுத் தொழிலாளர்களின் தலைவர்களாக விளங்கும் ஒருசில சுயநலவாதிகள், பட்டங்களையும் பதவிகளையும் பெறும் நோக்கோடு தொழிலாளர்களை பகடைக் காயாக, பந்தாக பாவித்து, இலங்கையென்ற தீவையே உருவாக்கிய மலைநாட்டு தொழிலாளர்களை, நாடற்றவர்களாக, கள்ளத்தோணிகளாக பிரஜாவுரிமை அற்றவர்களாக ஆக்கி, இன்று இந்தியாவா, இலங்கையா என்று தடுமாறும் நிலையை உருவாக்கிவிட்டு, சம்பள உயர்வு என்ற போர்வையிலே மயக்கி, இந்நேரத்திலே, தமிழினத்தையே வேரோடு குழிதோண்டிப் புதைக்கும் ஆட்சியாளர்களுக்கு வால்பிடிக்கும் தலைவர்களை நம்பி, இனிமேலும் தமிழ் தொழிலாளர்கள் ஏமாறக்கூடாது என்பதற்காக, தமிழன் என்ற தன்மானம் நிலைக்க, தமிழன் எல்லா உரிமைகளும் பெற்று சிறப்புடன் வாழவே தமிழரசுக் கட்சி இன்று வாக்குரிமையற்ற மலைநாட்டு தொழிலாளர்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுத்தரவும் எந்தத் தியாகங்கள் புரியவும் தயாராக இருக்கின்றது.

'உலகில் வாழும் [illegible] லொவ்வொருவரும் தமிழ் மொழியுலகில் சிறந்தமொழியாக கணிக்கப்பட்ட நேரத்தில், இன்று நாங்கள் தமிழ் மொழி பேசுவதற்கு அஞ்சும் நிலை அறவே ஒழியவேண்டும். தமிழன் இழந்த எல்லா உரிமைகளையும், வென்றெடுக்க தமிழரசுக் கட்சி தந்தை செல்வா அவர்களின்கீழ் திடசங்கற்பம் பூண எந்நேரமும் காத்திருக்கின்றது. ஆகையால் சுயநலவாதிகளை நம்பி, ஏமாறிய எம் தமிழ்த் தொழிலாளர்கள் இன்று கழகத்தின் பலத்தை பெறுகிறுர்கள் என்பதை அறிந்த ஒருசிலர் கொக்கரிப்பதில் ஆச்சரியப்படவில்லை.

இக்கட்டான இந்நேரத்தில் தமிழ் மக்கள் கட்சி பேதங்களை மறந்து, தமிழர்கள் நாங்கள் என்ற இனவுணர்வோடு, மூவரணைக் கொடியின்கீழ் ஒன்றுதிரண்டு [illegible] தமது உரையில் கூறினுர்.

மேலும் இராகலை மாவட்டப் பிரதிநிதி திரு. ஆறுமுகநாதன் பேசுகையில்:—

"இன்றைய இக்கட்டான நிலையில் மலையக தமிழ் மக்களை எடுத்துக்கொண்டால், மற்ற தொழிற்சங்கங்கள் கோருவதுபோல முதலில் சம்பள உயர்வு அவசியமான நிலையில் இல்லாதபோதிலும், இந்நாட்டு பிரஜாவுரிமையைப் பெற்று, வாக்குரிமையுள்ளவர்களாக, சிங்கள மக்களைப்போல மலையகத் தமிழர்கள் காணி வழங்கப்பட்டு குடியேற்றப்பட்டு கள்ளத்தோணி நாடற்றவர்கள் என்ற இழிச்சொற்களைஒழித்துக்கட்ட, நாம் இழந்த உரிமைகளை மீண்டும் பெற தமிழர்கள் யாவும் ஒன்று திரண்டு போராட திடசங்கற்பம் பூணவேண்டும். இதற்காக மலைநாட்டில் நிலவும் எல்லா தொழிற்சங்கங்களும் மலைநாட்டு தொழிலாளர்களுக்கு கட்டாயம் பிரஜாவுரிமை பெற்றுத்தர போராடுவது முக்கியமாகும்;

[illegible] ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் மலையகமக்கள் சார்பாக பாராளுமன்றம் சென்றிருக்கும் ஜனப் அசீஸ் போன்றவர்கள் மலைநாட்டு தமிழ் மக்களின் பிரஜாவுரிமைக்காக முதலில் போராடுவதே சாலச் சிறந்தது என்று மலையக மக்கள் சார்பிலும், இ. தொ. கழக சார்பிலும் கேட்டுக்கொண்டார்; இன்று ஒரு சில சுயநலவாதிகள் மலையக தமிழ் மக்களை தவறான வழியில் - யாழ்ப்பாணத்தவர் - மலையகத்தவர் என்று பிரித்து தமிழினத்தை இந்த இக்கட்டான நேரத்தில் பிரித்து தமிழர்களின் பலத்தை பங்கப்படுத்தாமல், கட்சி வேறுபாடுகளையெல்லாம் மறந்து நாம் தமிழர்கள் என்றமுறையில் ஒன்று திரண்டு உரிமைப் போராட்டம் நடத்துவதை விட்டு, இனத்தை பிரித்து சுயநலத்தை பெருக்குவது இனத்துக்கு செய்யும் மாபெரும் துரோகம் என்று திட்டவட்டமாக கூறினுர்; இவ்வாறு சுயநல விஷமிகளால் அப்பாவி தொழிலாளர்கள் காலம்காலம் கஷ்டப்பட்டு அடிமைகளாக வாழும் நிலையை இனிமேலும் பொறுக்க இயலாது, இதனுல் உயிரைக்கொடுத்தும் இனத்தையும் - மொழியையும் இறுதிவரை காப்பாற்றுவோம் என்று தனதுரையை முடித்தார்;

## மலையகத்திலே........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாவளமும் உண்டு ஈழத் தமிழ் நாட்டில்

தணிக்கை

தணிக்கை

தணிக்கை

### பண்ணைகள்:

வன்னி நாட்டிலே மாட்டுப்பண்ணைகள், ஆட்டுப் பண்ணைகள், கோழிப்பண்ணைகள், தேனீ வளர்ப்புகள், பன்றி வளர்ப்புகள் இப்படி எத்தனையோ பண்ணைகள் அமைக்க நிலமுண்டு. இன்று வெளி நாட்டிலும் உள்நாட்டிலும் முட்டைக்கு, இறைச்சிக்கு, பாலுக்கு தேனுக்கு அதிக கிராக்கியுண்டு. இப்பண்ணைகள் அமைப்பதினால் சுயதேவைப் பூர்த்தியும் அதிக வருவாயும், வெளிநாட்டு செலவாணி மீதமும் ஏற்படும்.

அது மட்டுமன்றி முந்திரிகை தோட்டம், மரவள்ளித்தோட்டம் பருத்தித் தோட்டம் முதலியன ஆரம்பிக்கலாம்.

வன்னிநாடு, மன்னார் மட்டக்களப்பு திருமலை முந்திரிகைச் செய்கைக்கு சாலச் சிறந்தது. முந்திரிகைக்கு வெளிநாட்டில் அதிக மதிப்பும் ஆதரவும் உண்டு. மரவள்ளி செய்வதினால் மரவள்ளி மாவும் அதைக் கொண்டு சவ்வரிசியும் செய்திடலாம்; வளமுடையோர் சவ்வரிசித் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம்.

### பழத்தோட்டம்:

ஈழத்தமிழ் நாடு பழவகைகளுக்கு ஏற்ற இடமாகும்; குறிப்பாக கறுத்த கொழும்பான் மாம்பழத்திற்கு உலகெங்கணும் உன்னத மதிப்புண்டு. வெளிநாட்டிற்கு ஏற்றிடலாம். ஒரு தமிழ் மகன் ஐந்து ஏக்கர் நிலத்தில் மாமரங்கள் நடுவானாகில் 5-6 வருடத்தில் பயன் அடைய ஆரம்பிப்பான். கால ஓட்டத்தில் வளமான வாழ்வு பெறுவான். அத்துடன் தோடை, எலுமிச்சை, வாழை, மாதுளை, போன்றவை வைத்திடலாம். திரண்ட செல்வம் பெற்றிடலாம்.

### உப-உணவு

சிறுபயிர் செய்வோர்களுக்கு சிறந்த இடங்கள் உண்டு. சின்ன வெங்காயம்,

**சேமமடு நல்லையா**

உருளைக்கிழங்கு, கடலை, பிடிப்புகையிலை முதலியன செய்யலாம். அது மட்டுமன்றி குரக்கன், வரகு, தினை, சாமி, மொண்டி, முதலிய சிறு பயிர்கள் விதைத்திடலாம். வேளாண்மை செய்வோருக்கு வன்னி நாட்டிலே எத்தனையோ பழைய இதைந்த குளங்கள் திருத்தி அமைத்து செய்ய காத்திருக்கின்றது; மூதூர் பிரதேசத்தில் போதும் போதும் என்ற நீர்ப்பாசன வசதியுண்டு.

### கருங்கல் செங்கல் சூளை:

இன்று இலங்கையில் கருங்கல்லுக்கு, செங்கல்லுக்கு சுண்ணாம்புக்கு நல்ல மதிப்புண்டு. எம் தாய் நாட்டில் நல்ல வளமுண்டு. ஏற்ற நிலம் உண்டு; கருங்கல்லு மலைகள் வன்னி நாட்டில் ஏராளமாக உண்டு. வளமுடையோர் கருங்கல்லு தொழிற்சாலை தொடங்கிடலாம், அடுத்து செங்கல்லுக்கு ஏற்ற மண் உண்டு. வீடு கட்டுவோருக்கும் பொதுப் பணிமனை அமைப்போர்களுக்கும் விற்கலாம்; சுண்ணாம்பு கற்கள் தீவுப் பகுதிகளிலும் குடநாட்டிலும் தாராளமாய் உண்டு; சூளைத் தொழிற்சாலை தொடங்க வாய்ப்புண்டு. இவைகள் குறைந்த செலவில் நிறைந்த வருமானம் அடையக் கூடியவை.

### கடல் வாய்ப்பு:

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இயற்கையாக மீன் வளர்ப்புக்கு, இறால் வளர்ப்புக்கு ஏற்ற இடங்கள் குறிப்பாக சொன்னால் தீவுப்பகுதிகளில் ஓடைகள் குடற்கையாக அமைந்துள்ளன. இயற்கையின் அனுசரணையுடன் மீன் வளர்ப்பு நிலையம் ஆரம்பித்தால் ஆறு மாத காலத்தில் அதிக பயனை அடையலாம். பொருளுடையோர் இந்நிலையங்களை தொடங்கினால் படித்த, பாமர மக்களுக்கு போதிய வேலை வாய்ப்பு பெற இடமுண்டு. அத்துடன் மீனை டின்னில் அடைக்கும் தொழிற்சாலையும் ஆரம்பிக்கலாம்; அது மட்டுமன்றிவளமுடையோர் ஆழ்கடலில் மீன்பிடிக்கக் கூடிய மின்விசை படகுகளை வாங்கி மீன்பிடிக்கலாம்; பரந்த அளவில் இத்தொழில் செய்தால் தாராளமான தனமும் ஏராளமான வேலை வாய்ப்பும் உண்டு; அது மட்டுமா? இயற்கையாக சில இடங்களில் உப்பு விளைவிக்கக் கூடிய இடங்கள் உண்டு; இதையும் நம்மவர்கள் பயன் படுத்தலாம்.

### பனம் பொருட்கள்:

கற்பகதரு என அழைக்கப்படும் பனைகள் எமது நாட்டில் ஏராளம். இதில் உண்டாகும் பொருட்கள் எல்லாம் மனிதருக்கு தேவையானது. பனை ஓலையால் பின்னப்படும் பெட்டி, கடகம், களகு, உமல், திருகணி, உறி, பாய் போன்ற சாமான்கள் பிறநாட்டாரின் ஆவலையும் ஆதரவையும் உண்டாக்கக் கூடியதாய் இருக்கின்றது; அத்துடன் பனம் மட்டையில் இருந்து எடுக்கப்படும் நார் பிறநாட்டிற்கு ஏற்றப்படுவது குறிப்பிடத்தகும்; இதைப் போல் இன்னும் பல பொருட்களால் வெளிநாட்டில் கிராக்கியை ஏற்படுத்தலாம் இவையாவும் இயற்கை நமக்கு அளித்த செல்வம்; பனம் கனியில் இருந்து எடுக்கப்படும் பனாட்டு எதிர்வரும் காலத்தில் தமிழரின் முக்கியமான உணவாக்கப்பட வேண்டும். இன்று இப்பண்டம் தேடுவாரற்று இருந்தாலும் வெகுவிரைவில் நாட வேண்டிய கட்டத்தில் உள்ளோம்.

தணிக்கை

---

## கண்ணினும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போல, தமிழ் மக்களும் தம் இறைமையையும், உரிமையையும் பெறப்போகின்றார்களா? அன்றேல் தம் வருங் காலச் சந்ததிகளை மீளா அடிமைகளாக அழிய விடப் போகின்றார்களா? எந்த விலை கொடுத்தும் எம் சுதந்திரத்தை பெற்றே தீருவோம் என்றே நீங்கள் பதிலளிப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும்;

'தமிழினத்தை அடிமையாக்கும் இவ்வரசியற் திட்டத்தை முற்றாக நிராகரிப்பதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை; கண்ணினுமினிய சுதந்திரம் காணும் இம் முயற்சியில் கட்சி பேதங்களை மறந்து சாதி, சமய பிரதேச வித்தியாசங்களை ஒதுக்கி ஒன்றுபட்டுச் செயலாற்ற வருமாறு தமிழினத்தின் ஆண், பெண், இளைஞர், முதியோர் அனைவரையும் அழைக்கின்றேன். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் வீற்றிருக்கும் எவரும், இவ்வடிமைச் சாசனத்தில் கையொப்பமிடாது தடுத்து நிறுத்த வேண்டியது எமது கடமையாகும்.

'எமக்கு முன் இரண்டு மார்க்கங்களே உள்ளன. ஒன்று நாம் இதுகாறும் கோரிவந்திருக்கும் சமஷ்டி அமைப்புக்கு உட்பட்ட சுயாட்சித் தமிழரசாகும். அதையே நாம் மீண்டும் கோரி நிற்கின்றோம். அதை சிங்களத் தலைவர்களும் அரசாங்கமும் தொடர்ந்தும் நிராகரித்து வருவார்களா ளுள் எமது சுதந்திரத்தை நிலைநாட்ட, தன்மானத்தைக் காக்க, எம் இனத்தை அழிவிலிருந்து பாதுகாக்க, ஒரு சுதந்திரத் தமிழரசைக் கோரும் நிற்பந்தத்தை ஏற்படுத்துவார்கள் என்பதை ஆட்சியாளர்களுக்கு உறுதியாகக் கூற விரும்புகின்றேன் மனிதர்களாக வாழ விரும்பும் இனத்திற்கு வேறு மார்க்கமில்லை.'

## நாங்கள் ஏழைகள்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தாலி கட்டினம் உனக்கு ஆசையெண்டால் போட்டு வாவன்...'

வெத்திலையை தன் பொக்கைவாயுக்குள் திணித்துக் கொண்டே சொன்னாள் அவள்.

'எனை மரியாதையைக் கொடுத்துத்தான் மரியாதையை வாங்கவேண்டும்...'

கௌரவம் என்பதில்லை தலைகாட்டியது;

'நீ சொல்லுறதும் சரிதான் மோனை உனக்கும் இருக்கிறது ஒரு சகோதரம் தானே... இரண்டு... மூண்டு கூடப் பிறந்ததுகள் இருந்தால் ஒண்டின்ரை கலியாணத்தைப் பார்க்காவிட்டால் மற்றதின்ரையைப் பார்க்கலாம்... நான் சொல்லுறதெண்டு நீ கோவிக்கக் கூடாது... ஏதோ உன்ரை விருப்பம்...'

சுத்திவளைச்சுப் பேசினாள் அவள்.

'எனை ஆச்சி மற்றவை தான் என்னை பேயன் எண்டு நினைக்கிறுங்கள் எண்டுநினைச்சன்...நீ...கூட என்னை அப்படித்தான் எண்ணுகிறாய் போலை கிடக்கு...'

ஆத்திரத்துடன் அந்தக் கிழத்தை விளித்தேன்;

'நான் அப்படி நினைப்பனே ராசா... உன்னை எனக்குத் தெரியாதே...?'

அவள் பார்வை மன்னிக்கும் படியான பாவத்தில் மிழிர்ந்தது;

'எல்லாரும் என்னை அவமானப்படுத்த காத்திருக்கினம் கலியாணத்திற்குப் போனால் நாலுபேர் என்னை மதிப்பினமே...நாய் மாதிரி நக்கவந்துட்டுது எண்டல்லே சொல்லுவினம்... அப்படியான கலியாணத்திற்கு நான் போகவேண்டுமே...? எனை எங்கடை அம்மா என்னை குறை மாதத்திலேயே பெத்தவ...நானும் பத்து மாதத்திலைதான் பிறந்தனான்... எனக்கும் மானம்... மரியாதையுண்டு..'

இதயத்தில் கிடந்த ஆத்திரத்தை அள்ளி விசினேன்.

'சரியடா தம்பி பொழுதும் கருகிக்கொண்டு வருகுது... மழையும் வரும் போலை கிடக்கு... நீ போட்டு நாளைக்கு வாவன்...'

என்னை ஆவேசத்தைக் கண்டு கிழவி பயந்துபோச்சுது போலை அதுதான் வீட்டை அனுப்பும் படலத்தை ... ... அவளிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டை நோக்கி விறு நடை போட்டுக்கொண்டிருந்தேன்... மழை தூறிக் கொண்டிருந்தது...

ஒழுங்கையை விட்டு ரோட்டில் ஏறி நடக்கின்றேன்; நேரமும் ஏழுமணியாகி இருக்கும்... மனத்தாலே மணியை கணித்துக்கொண்டு செல்கின்றேன். விதானையார் வீட்டில் அவர்கள் புதிதாக வேண்டியிருக்கும் "ரான்சிஸ்ரர்" ரேடியோவிலிருந்து வந்த பாடல் சோழகக்காற்றின் உதவியுடன் என் காதுகளுக்குள் புகுந்து விடுகின்றது; எனக்கு பிடித்தமான பாடல்தான் அது...

"இனம் என்றும் குலம் என்றும் பேசுவோர் கையில் இருந்தால் தான் விற்றுக் கொண்டு விசுவார், பணம் இல்லாதான் வீட்டிலே அன்னையும் இல்லை...தந்தையும் இல்லை...பெற்ற பிள்ளையுமில்லை...'

உண்மையான தத்துவம்... உணர்ச்சியை தூண்டும் கருத்துவளம்...இந்தக் கவிஞரும் ஏழையோ...மழை இரைச்சலுடன் பெய்கிறது—இன்னும் அதிக வேகமாக நடக்கின்றேன்...எங்கிருந்தோ வந்த 'கோல்டன்' கார் ரோட்டுக் கானில் தேங்கியிருந்த வெள்ளத்தை என் மீது வாரி இறைத்து விட்டு மின்னல் வேகத்தில் பறக்கின்றது...காருக்குள் இருந்தவர்கள் பின் கண்ணாடியால் பார்த்து பல் இழிக்கிறார்கள் பணக்கார வர்க்கம் போல இருக்கிறது. அதுதான் இந்தப் பரிகாசம்...என் சேட்டிலிருந்த சேற்றை தட்டி விட்டு நடக்கின்றேன். என் உதட்டிலிருந்து மட்டும் வேதனைச் சிரிப்பு ஒன்று வெடிக்கின்றது. ஆனால் உள்ளமோ அழுது கொண்டிருக்கிறது...நாங்கள் ஏழைகள்... எங்களால் என்ன செய்ய முடியும்...அழத்தானே முடியும்.

(யாவும் கற்பனை)

## விஸ்வமடுவில் தமிழரசுக்கிளை

விஸ்வமடு படித்த வாலிபர் திட்டத்தில் 4-2-72 வெள்ளிக்கிழமை பி. ப. 4 மணியளவில் தலைவர் திரு: எக்ஸ். எம். செல்லத்தம்பு தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் கூடி ஆர்ப்பரிக்க கட்சிக்கிளையை அங்குராற்பணம் செய்து வைத்தார். அவர் பேசும் போது அதிவிரைவில் தமிழ்ப் பகுதியில் தமிழ் கொடி பறக்கும் என்று குறிப்பிட்டார். கூட்டத்தில் அடலேறு ஆலாலசுந்தரமும், கிளிநொச்சி பட்டினசபைத் தலைவர் சு: முருகேசவும் கலந்து கொண்டார்கள்: உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது;

தலைவர் நா: குணநிதி, உப-தலைவர் க. யோகேஸ்வரன் செயலாளர் இரா. நாகேந்திரம், உப-செயலாளர் சொ. யோகநாதன் பொருளாளர் க. அன்னலிங்கம்.

நிர்வாக சபை உறுப்பினர்கள்: செ. சிவலிங்கம், எஸ். இரத்தினகோபால், ஆ. நடராசா, செ. செல்லத்துரை, கு. கந்தசாமி, வ. பரராசசிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


# இப்பொழுது சினிமாஸ் திரைகளில் காட்சியளிக்கின்றது

கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாசா (வெள்ளவத்தை) — கிங்ஸ்லி (கொழும்பு) — சபையர் (வெள்ளவத்தை) — வெலிங்டன் (யாழ்நகர்) — லிடோ (யாழ்நகர்)



எம். ஜி. ஆர். - பத்மினி

அசோகன் சுந்தரராஜன் மஞ்சுளா

சோ தேங்காய்சீனிவாசன்

— நடித்த —

சத்தியா மூவிஸ்

# ரிக்ஷாக்காரன்

(ஈஸ்மன் கலர்)

இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

---

# சிலோன் தியேட்டர்ஸாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது

24ம் திகதி முதல்

ஈழத்து நடிகர்கள்
திரம்பட நடித்த
மாபெரும் வெற்றிச்
சித்திரம்

# குத்து விளக்கு

2துவ மாதமாக

செல்லமகால்
(கொட்டாஞ்சேனை)

சிவாஜி, ஜெயலலிதா

நடித்த

# சுமதி என் சுந்தரி

---

# சிலோன் எண்டர்டெயின்ஸ்மென்ட்ஸாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது



3வது வெற்றி மாதம்

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

நடிகர் திலகத்தின் 150வது வெற்றிச் சித்திரம்

சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார்
விஜயகுமாரி, முத்துராமன், டி.கே.பகவதி
வி. எஸ். ராகவன் நடிக்கும்

(ஈஸ்மன் கலர்)

# சவாலே சமாளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபத்திரிகை ... கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ. இலக்கத்தில்
1-72-ம் வருடம் பெப்ரவரி மாதம் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் சோலை மகேசன்